உ

கடவுள்துணை.

ஸ்ரீபரதேவதார்ப்பணமஸ்து.

புலிப்பாணிமஹாமுனிவர்

அருளிச்செய்த

பலதிரட்டுஜாலம்.

சிதம்பரசக்கரம்.

இஃது

சரவணபுரம்.

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

புரசைபாக்கம்

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

தாத்ரு - வூல.

பழுதில்வெட்பாலையம்பலகைமீமிசை
யெழுதுசித்திரமெனவிருந்துசக்கரம்
வழுவறப்பொறித்துமுன்வைத்துநூறுபத்
தெழுபதினாயிரமிசைப்பினம்மவோ. (௮)

அலகைவெம்பூதங்களாதியாம்பல
பலபிலிசூனியம்பறக்குமன்றியும்
நிலமிசைவருத்தியநெடியநோவெலாம்
உலவியவளிச்சருகொக்குமென்பவே. (௯)

(கைகான்முடக்கல்.)

பாவையொன்றுபருமுருத்கத்தினால்
ஆவலோடுசெய்தப்பதுமையிற்
றேருவின்மாப்பதுமையொன்றனாற்றிவைத்
தேவின்முள்ளுடனெச்சிலுரோமமும். (௰)

பேரும்வைத்துப்பிரபலமாகவே
பாருளோருணராதுபயிரவ
னாருர்திருமந்திரமாயிரம்
ஈரிரண்டங்கிருந்துசெபித்தமோ. (௰௧)

ஆணியொன்றெடுத்தங்கையிலாவது
காணருங்கழற்காலினிலாவது
பூணின்வாதப்புடிப்பதுபோலவே
காணாமற்றிதுகண்டுகொள்வாயரோ. (௰௨)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

(வேடிக்கைவித்தை)

வேடிக்கைவிளையாட்டென்றுவிளம்புவேன்சேணிவெப்பில்
மூடிக்கையிருந்தால்யாருமோகிப்பார்விரிப்பின்வாளாக்
கோடிக்கைவிரிவாருண்மைகுலவியதேங்காயென்று
நாடிக்கையாலேவாங்கிநானிலமறியமாதோ. (௰௩)
மற்றதைத்தொளைத்துப்பச்சைவாளரவொன்றுபோட்டுக்
குற்றமில்லாமல்வாயைக்கோதறமூடித்தாமம்
முற்றவேகொடுத்துச்செவ்வாய்முதற்குழிகல்விலைத்துச்
செற்றபிலன்பினோடுதினமதேழானபின்னே. (௰௪)
எடுத்தொருகலயத்திட்டேயெரித்துநீதையிலம்வாங்கிக்
கடுத்ததும்பியவெம்மானைக்கருத்தினிலிருத்திப்போற்றி
விடுத்தொருவிளக்கிற்றீயவிளங்கவேயேற்றிநோக்கின்
அடுத்தவப்பசியபாம்பேயகமெலாந்தெரியுமன்றே. (௰௫)

ஜாலத்திரட்டு-முற்றும்.

உ

சிவமயம்.

புலிப்பாணிமஹாமுனிவர்

அருளிச்செய்த

பலதிரட்டுச்சூத்திரம்.

காப்பு.

வேதாந்தநாயகியே விமலவேணி
வீரமாகாளியம்பாள் ருத்திரரூபி
நாதந்தப்பேரருளே யகோரிவீரி
நாரணியேகாரணியே தேவசத்தி
மூதாந்தமூர்த்திபரா பரையே துர்க்கை
மூவருக்குமுதற்பொருளே யாநந்தாயி
மாதாந்தந்தமையீன்ற ஏகவல்லி
மாமுகத்தோன்பலதிரட்டுக் காப்புத்தானே. (க)

நூல்.

முப்பூமுறை.

தானென்றமுங்பூவைச்சொல்லக்கேளு கருவானவண்டமடா வாதியாதி;காணென்றவண்டத்தைக்கொண்டுவந்து-கடிதாகநொறுக்கியதைரூபாய்போலே, மானென்றபூநீற்றைக்கணாத்திருத்து - மைமந்தனேயதிற்போட்டுக்குறுகக்காய்ச்சி, பானென்றசலம்விட்டுக்கழுவிப்போடு-பண்பானரவிதனிலே யுலரப்போடே. (உ)

போட்டேநீசுண்ணக்கல் நாலுநாழி-போட்டதிலேநீரூற்றிவிட்டுநீற்றி,நாட்டேநீகலக்கியதைத்தெளியவைத்து நாயகனேமறசட்டிதனிலிறுத்துக், கூட்டேநீயண்டஜலமதிலேபோட்டுச்-குறுக்கியே காய்ச்சியதையெடுத்துக்கொண்டு, ஆட்டேநீகுழிக்கல்லிலிந்நீர்விட்டு அப்பனேமைபோலவரைத்துத்திரோ. (௩)

திரோநீயுலரவைத்துவில்லைபோலே-திறமாகக்காய்ந்தபின்னெடுத்துமைந்தா, சிரோநீயுலையில்வைத்தூதுதூது - சின்மயத்தின்சுண்

ணமதையென்னசொல்வேன், பாரோநீசுண்ணமதுஆகுமட்டும்பாங்
காகயிந்நீரிலரைத்தேபூது, வீரோநீகரைத்தேற்றிமைந்தாநீயும்விதமா
னசுண்ணமதைக்கலக்கிப்போடே. (௪)

போடேநீகாணாயினுற் பாத்திகட்டிப்-பொங்கமுடன்வெந்நீ
ராயதிலேவாரு, நாடேநீயதைவழித்துக்கரைத்துநன்றாய், நாயக
னேதெளிவிறுத்துநவநாள்வாரு, ஆடேநீரவிதனிலேயுலரவைத்துஅ
ப்பனேயன்பாகச் சத்திபூசை, தேடேநீகணபதியின்பூசைசெய்து
திறமாகக்குப்பியினி லடைத்துவையே. (௫)

வையேநீமலைச்சாம்பலமுரிநீரில், வகையாகச்சமன்கொண்டுக
லக்கித்தேற்றி, செய்யேநீதெளிவிறுத்துப்பாத்திதன்னில்செயலாக
வொன்பதுநாள்மட்டும்வாரு, மையேநீயுப்பாகுமெடுத்துக்கொண்
டு, மைந்தனேகுப்பியிலே பதனம்பண்ணு, கையேநீயுப்பெல்லாமி
ந்தப்பாகம், கருவாகவெடுத்தாக்காலுப்பேயாமே. (௬)

உப்பானமுப்பூவைச் சமனாய்ச்சேர்த்து, உத்தமனேமாதர்வி
டாய்நீராலாட்டி-ஒப்பாகவில்லைசெய்துலரவைத்து, ஒளிவானமுழப்
புடத்திலுகந்துபோடு, வெப்பானபுடமாறியெடுத்துக்கொண்டு, வி
தமானகுப்பியிலே வைத்துப்பூசி, செப்பானமுப்பூவின்சுண்ணத்
தாலே-செயமாகுந்தொழில்களெல்லாஞ்சித்திதானே. (௭)

(ரசக்கட்டு,)

சித்தியாய்ரசக்கட்டுசொல்லக்கேளு, சிறப்பானபஞ்சரியின்பா
லாற்கட்டு, புத்தியாய்க்கூட்டியெல்லா மடைத்துவைத்துப்பொங்க
முடனுதயாதி துடங்கும்போது, வெற்றியாய்க்குட்டியொன்றுகுடி
க்கவிட்டால், விதமாகப்பால்திரம்பிழுக்கிற்சிந்தும், பத்தியாய்ப்பல
னமுடன்மிசைந்தமுத்திப், பாங்காகச்சத்தியாய்ரசத்தைவாரே. (௮)

வாரோநீவிராகனெடையைம்பத்தொன்று வளமாகமுன்சொன்
னமுப்பூச்சுண்ணம், பாரோநீவிராகனெடையொன்று ஆக்கிப்பதமா
கச்சத்தியுடபூசைசெய்து, சீரோநீவாயில்விட்டுச்செலுத்திப்போடுசெ
ம்மையாய்வாய்மூக்குஞ்சாந்தைத்தூத், தேரோநீபுதுப்பாண்டமதி
லேயிட்டுத் திறமாகவெடுக்கரச மணியுமாமே. (௯)

ஆமேநீநாகமொன்றுதங்கமொன்று- அடைவாகரசக்கட்டுஒன்
றுங்கூட்டி, வாமேநீதங்கமதையுருக்கிக்கொண்டுவளமாகரசக்கட்டு
நாகஞ்சேரு, தாமேநீசெம்பதிலேபத்துக்கொன்று தான்கொடுக்க
வொன்பதனைமாற்றுமாகும், நாமேநீகெந்தியிட்டுச்செந்தூரித்தால்
நாயகனேநவலோகவேலையாமே. (௰)

(திலகமுறை)

ஆமேநீவசியமொன்றுமையைக்கேளு, அமைவானகஸ்தூரிம
ஞ்சளப்பா,வாமேநீபூசியென்றகாந்தந்தானும்,வளமானகோரோசி
னைகிராம்புகூட்டித்,தாமேநீபச்சையென்றகூரத்தோடு, தயவானசா
திக்காய்விராகன்கால்தான், நாமேநீயிவையெல்லாம்பொடியாய்ச்
செய்து,நாயகனேவெண்டுகிலில்நீபரத்தே (௰௧)

பரத்தியேதலைமஞ்சங்கொடியுங்கூடப்பண்பாக்க் குருபாதந்
தனைநினைந்து, அரத்தியேதிரியாக்கிக்கருச்சீலைசுற்றி,யப்பனேதாம
ரைநூல்மேலேசுற்றி,வாத்தியேகாராவின்னெய்யைத்தானும்வளமான
சிரசோடுதன்னிலிட்டு,சிரத்தியேசிரசோட்டில்நெய்யைவார்த்துச்சி
வசிவாவிளக்கேற்றிமையைவாங்கே. (௰௨)

வாங்கியேபுழுகுடன்சவ்வாதுங்கூட்டி, வளமாகமத்தித்துச்சி
மிழில்வைத்துப்,பாங்கியேமோகினிக்குப்பூசைசெய்நீ,பண்பானம
ந்திரந்தான்சொல்லக்கேளு, தாங்கியேபூசையதுவாலைபூசைதயவா
கப்பூசித்துத் தியானமோது, ஆங்கியேஸ்ரீம் இறீம்கிலீமென்றோதி
ஆக்ருஷிணி மோகினியென்றங்கெண்ணே. (௰௩)

எண்ணவேதியானமொருலட்சமோது,என்னசொல்வேனுல
கமெலாம்வசியமாகும், நண்ணவேதங்கத்தால் வெள்ளியாலும் நல்ல
சிமிழ்க்குச்சுசெய்துதிலகம்போடு, பண்ணவேதேவராட்சதர்கள் தா
னும்பண்பானபுருஷரோடு மாதர்யாரும், அண்ணவேகேட்டதெல்
லாமீவார்பாரு அப்பனேபகையெல்லாமற்றுப்போமே. (௰௪)

போமேதான்மாற்றமொன்று சொல்லக்கேளு,பொலிவானஐ
ங்கோலப்பிண்டம்வாங்கி,நாமேதான் சூரணித்தெடுத்துக்கொண்டு
நாயகிப்பாள்சிலையிலேவைத்துருட்டி, ஆமேதான்சிரசோட்டில்காரா
நெய்யில்,அப்பனேமையெரித்தெடுத்துக்கொண்டு,வாமேதான்தில
கமிட மறையும்பாரோ,வளமானமாற்றமீதகிசித்தே. (௰௫)

அஞ்சனம்.

சித்தான அஞ்சனந்தான்சொல்லக்கேளு, சிறப்பானமூலிகை
யொன்றுரைப்பேன்மைந்தா, முத்தான ஆடாதோடைமூலியப்பா
முதன்மையாமதினுடையகிழங்கைக்கண்டு, பத்தானஎண்பேதமெ
ட்டுஞ்செய்து,பண்பானவதினுடையகிழங்குவாங்கி, வித்தானகுழி
யம்மிதன்னிலப்பா,விதமானகிழங்கதிலேவிராகன்போடே. (௰௬)

போடப்பா வதினுடையபழந்தானையா, பொங்கமுடன்கோ
ரோசினையுப்புங்கூட்டி,ஆடப்பாவிளக்கிட்டுச்சாரைநெய்யாலன்பா

கவெட்டுண்டசிரசினேட்டில், கூடப்பாமையெரித்தெடுத்துக்கொண்டுகூர்மையாய்சற்குருவின்பாதம்போற்றி, நீடப்பாமுக்காலும் பூசைசெய்து,நினைவாகப்புற்றினிடதேனிலாட்டே. (௰எ)

ஆட்டையிலேகுழியம்மிவெடித்துக்காணு,மப்பனேபாதாளங்செசமாத்தோணும்,கூட்டையிலேவழித்தெடுத்துச்சிமிழில்வைத்துச்,குருவானகணபதிக்குப்பூசைசெய்து, நீட்டையிலேயஞ்சனுதேவியனுமார்க்கும், நிச்சயமாய்ப்பூசைசெய்துகண்ணிற்போடு, காட்டையிலேநதிகளெலாங்கண்ணிற்றேன்றுங்கனிவாகக்கிண்டியதையெடுத்துக்கொள்ளே. (௰அ)

மாரணம்.

கோள்ளவேமாரணத்தைச்சொல்லக்கேளு,சொடிதானபாவமடாசொல்லொணது,அள்ளவேமாரணசக்கரத்தைக்கீறி, அடைவாகநீர்மலமுங்காற்கீழ்மண்ணும்,விள்ளவேகருவதிலே யரைத்துப்பூசிவிதமானவவன்பேருமழுந்தநாட்டித், தளளவேநாகத்தின்வாயினுள்ளேதான்செலுத்தித்தலைக்கீழாய்த்துக்கிக்கட்டே. (௰கூ)

கட்டியேசமர்த்தென்னவெட்டியப்பா - கருவானநிம்பநெய்யிலோமம்பண்ணு, தெட்டியேதென்முகமாயிருந்துக்கொண்டு - திறமாகச்செபிக்குமந் திரத்தைக்கேளு, கிட்டியேமசிநசியென்றேயோது - இருபையுடனெட்டுநாள்செபித்தாயானுல், நெட்டியேவாங்குமடா ஆரானலும்-நிமிடத்திற்கொல்லுமடாகண்டுபாரே. ()

பேதனம்.

பாரப்பாபேதனத்தைச்சொல்லக்சேளு - பண்பானவூமத்தங்காய்தான்மொட்டை, சேரப்பாவெதிரியிடகாற்கீழ்மண்ணும் - சிறப்பாகவதிற்செலுத்தி யவன்பேர்நாட்டி, வீரப்பாபேதனத்தை நன்றுயோதி - விதமாகவவனிருக்கு மூனாச்சுற்றி, கூரப்பாமயானத்திற்புதைக்கும்போது - குருவானகருக்கூட்டிப் புதைத்துப்போடே. (உக)

புதைத்தவுடன்பக்கமதித் பிரமைகொள்ளும்-பொல்லாதகோஷ்டியெல்லா மனேகஞ்செய்யும்-வதைத்தமட்டேதேசமெங்குஞ்சுற்றிமாள்வான்-வையகத்தோர்தான்பழித்துச்சிரிப்பார்பாரு, பதைத்துபதைத்தலைந்தலைந்தழுவானப்பா-பழிகாரன்பாவியவனென்னசொல்வேன், கதித்தமனத்துடன்வந்து காலில்வீழ்ந்தால்-கருவாகவதையெடுத்தாற்றிப்போடே. (உஉ)

வித்துவேஷணம்.

போடவேவித்துவேஷணத்தைக்கேளு - பொலிவானவேம்பின்மேற்காக்கைகூடு, நாடவேகழுதையுடசடையுங்கூட்டி - நாயகியாளறுத்தகயிறதுவுஞ்சேர்த்து, கூடவேபஞ்சுவெட்டியறுந்துபோனகுணமானநரம்பதுவும்பன்றிரோமம், சாடவேபித்தநகம்பித்தக்கூடை - சலாயனச்சுளகுடனேசித்தியாமே. (௨௩)

ஆமேநீமுச்சந்திமீதில்மண்ணு - மப்பனேயுட்கொளுத்தியடுப்பில்வைத்து, தாமேநீதென்முகம்நீர்வாணரூபந் - தயவாகத்தான்சுட்டுச்சாம்பலாக்கி, வாமேநீயறுகோணமீதிற்கீறி - வளமாகதூமசியென்றுநாட்டி, நாமேநீமந்திரந்தான்தும்தும்சிசீ - நண்ணியோம்நசிநசியென்றேயோதே. (௨௪)

ஓதியேயெடுத்துவந்தெதிரிபேரை - ஒளிவாகத்தான்முடிந்திரப்பில்வைக்க, பாதியேபடிவாசல்தூக்கிப்போட்டால் - பதிகெட்டுஇருவருமேபிரிந்துபோவார், வாதியேவடமொழியில்முன்னோர்சொன்ன - வளமானவழியெல்லாந்தமிழிலப்பா, நீதியேதப்பாமலெடுத்துநன்றாய் - நீணிலத்தோர்தான்பிழைக்கப்பாடினேனே. (௨௫)

பாடியேநாம்பெலும்புமயிருங்கூட்டிப் - பண்பில்லரச்சுடலையுடசாம்பல்சேரு, ஆடியேயுடும்பினதுதலையுங்கூட்டி - யப்பனேநாய்ப்பல்லுமதனிற்சேர்த்து, சூடியேயெட்டியிலே மாடன்செய்து - சுகமானபுதுக்கலசந்தன்னில்வைத்து, நாடியேயிதுவெல்லாமதனிற்போட்டு - நலமானமாடனைவிட்டோதுவாயே. (௨௬)

ஓதவேவண்ணாரவுதிரமாடன் - ஒளிவானவக்கினிசண்டிவிஞ்சைபாரு, வாதாகக்கறுத்தநாய்போலுமிக்க - வளமானகுரங்குபோல்பூனைபோலும், ஆதரவாய்ப்புலிபோலுங்கரடிபோலும் - அடைவானபெரும்பன்றிபோலுநிற்கும், பேதையேபேய்போலும்பூதம்போலும் - பிடித்திழுத்துக்கடிப்பதுபோற்செய்யுமாடன். (௨௭)

மாடனைத்தானுருவேற்றிவைத்துநீயும் - மைந்தனேபூசைசெய்தெதிரியில்லில், தாடனமாய்க்கலசமதையுடைத்தபோது - தட்டழிந்தேயவன்குலமுநாசமாகும், விடவேவியாதியிலேயழுந்துவார்கள் - விதம்விதமாய்மாடுகன்களுயிருஞ்சேதம், ஈடலையத்திரவியமுமழிந்துபோகு - மினியவேளாண்மைமுதனாசமாமே. (௨௮)

ஆமேதானெதிரினின்றபேரையெல்லா - மடைவானகாரியத்தகட்டிற்கீறி, வாமேதானைங்காயமரைத்துப்பூசி - வளமானகலசமதில்தாக்கிப்போடு, தீமேதான்சத்துருக்கள்வணங்கிவந்தால் - திறமாகத்தானெடுத்துப்பாலிற்போடு, நாமேதானோடுகிறசலத்திற்போடு - நலமாகநிவர்த்தியாய்ப்போகும்பாரே. (௨௯)

கள்ளனைப்பிடிக்க

பாரப்பாநிலவாகைமலைகள்தோறும் - பண்பாகத்தானிருக்குமறிந்துபாரு, வாரப்பாவதினுடையவிளையைத்தானும் - வளமாகப்பத்துபலமெடுத்துவந்து, சீரப்பாதலைமஞ்சங்கொடியுமாவும் - சிறப்பாகமுப்பூவும்விராகன்கூட்டிச், சேரப்பாவில்லைதட்டியுலரப்போடு-திறமாகவுலர்த்தியதைத்தயிலம்வாங்கே. (ருய)

வாங்கியேயாள்காட்டிமுட்டைதன்னை - வளமானசிற்றண்டத்தயிலம்போலே, தாங்கியேவாங்கியதைத்தயிலநேரோ - தயவாகத்தானெடுத்துச்சிமிழில்வைத்து, ஒங்கியேகளவுமுதற்குன்யம்யாவு -முற்றுப்பார்தோற்றுமடாகள்ளமெல்லாம், நீங்கியேயதுகண்டுபிடித்துக்கொண்டு-நினைவாகக்குருபாதம்பணிவாப்தானே. (ருக)

குறிசொல்ல.

தானேதான்குறிசொல்லும்விவரங்கேளு - தயவாகப்பச்சைவென்றபுமுருகோஷ்டம், மானேதான்பச்சையென்றபூரத்தொடுமைநந்தனேசந்தனமுஞ்சமனைச்சேர்த்து, பானேதான்சலம்போட்டுமைபோலாட்டிப் - பண்பாகக்கைதனிலேபூசிப்பின்னே, வீணேதான்போகாமல்திரிகோணமிட்டு -விதமானஸ்ரீங்காரமுள்ளேநாட்டே. (ருஉ)

நாட்டியேமந்திரத்தைச்சொல்லக்கேளு- நலமாகத்தான்செபிக்கமூன்றுகாலம், ஒட்டியேஓம்நமோபகவதேஓம் - உக்ரமாகாளிசாமுண்டியாயி, நீட்டியேவயிரவிசாம்பவியோங்காரி - நிமலிமகாசத்திநமாநமகாவென்றே, ஆட்டியேலட்சமுடனுயிரத்தெட்-டன்பாகத்தான்செபிக்கச்சித்தியாமே. (ருரு)

சித்தியாவருமளவுமூன்றுகாலஞ் - சிறப்பாகத்தலைமுழுகித்தியானமோது, பத்தியாயொருபொழுதுஅழுதுகொள்ளு- பாங்காகமுன்னெடுக்குங்கவளந்தன்னை, நத்தியேமுன்னிறப்பின்மேலேவைத்து-நலமாகவேஷ்டியிலேபடுக்கவேணும், வெற்றியாய்வஸ்துடனேசத்திவைத்து-விதமானமுதற்பூசைசெய்குவாயே. (ருச)

செய்யவேமண்டலத்தில்சித்தியாச்சு - செய்தொழில்களின்னதென்றுசொல்லலாச்சு, பையவேமுன்னடந்தசேதியெல்லாம்-பண்பாகநினைத்ததெல்லாஞ்சொல்லும்பாரு, அய்யனேபுகையதுவுங்குடிக்கலாகா - தடைக்காயும்வெள்ளிலையுநிகுந்துபோடு, நையவேகன்னத்திற்கையைவைத்து - நடந்தவொருசேதியெல்லாஞ்சொல்லுவாயே. (ருரு)

சொல்லவேநின்றதொருவேங்கைக்கட்டை சோபிதமாய்ச்செய்தபின்புசொல்லக்கேளு, வேல்லவேயோனுன்தோ லுரித்துக்கட்

டி விதமானபேதனச்சக்கரத்தைக்கீறி, நல்லவேசலாகையிற் சக்கரத்தைச்சுற்றி - நாயகனேயுட்பதித்துக்கட்டித்திரும்,மல்லவேயடித்திடவேயெதிரியெல்லா-மதிமயங்கிவாய்புலம்பப்பகருவேனே. ()

(சொக்குத்தூள்)

பவகருவேன்பொடியொன்று சொல்லக்கேளு பாங்சானசெருக்குடையபாக்கைவாங்கி, நிகழவேவப்பையுடமூலத்தோடு- சிறப்பானநிலப்பனையுந்தாளிவேரும்,புகழவேயத்திப்பேயால்வேரும் பொலிவானகுப்பையுடமேனிவேரும், அகழவேவேளைவேர்கழற்சிவேறும் அப்பனேயூமத்தம்வித்துஞ்சேரே. (௩௭)

சேரப்பாதலைமஞ்சங்கொடியுங்கூடச் செயலான மாதர்விடாய்ச்சீலைகூட்டி, ப்ாரப்பாமித்தனுட சாம்பல்மண்டை பாங்கானவூமைமண்டைப்பொடியுஞ்சேர்த்து, நீரப்பாவிதுவெல்லாஞ் சமனுய்க்கூட்டித் திறமாகப்பொடிசெய்துவைத்துக்கொண்டு, கூரப்பாபேயத்திப் பேயால்பாலும் கூடவே தான்சேர்த்துப் பொடித்திடாயே. (௩௮)

பொடியெடுத்துத்தூவிவிட்டாற்சகலபேரும் பொறிகலங்கிமதிமயங்கிக்கிடப்பார்பாரு, மடிபிடித்துத்தான்புரட்டிப்பொருள்கொண்டாலு - மங்கையவளைப்புணர்ந்தாலுமறிவிராது, தடியெடுத்தேயடித்தாலுநினைவிராது - தயவாகச்சலமங்கேதெளிக்குமட்டும், வடிவெடுத்தபோகருட கடாட்சத்தாலே - வழுத்தினேன் புலிப்பாணிசொக்குத்தூளே. (௩௯)

(விந்துஸ்தம்பனம்.)

தூளைவிட்டு இ்ன்னமொன்றுசொல்லக்கேளு- துளக்கமுள்ளபாளைவித்தெடுத்துவந்து, பாளையென்றவிந்துதானிறுக்கிவைக்கும்பண்பானபூமிசக்கரையின்மூலம், காளையென்றபூனையுட காலிவித்து - கனிவாகவகைவகைக்குவிராகன்ரண்டு, ஆளவேயாவின்பால் தன்னுலாட்டி - படைவாகப்பன்னிரண்டுநாள்தான்கொள்ளே. (௪௰)

கொள்ளவேயத்திசந்திகொண்டபோது - கோடிபெண்ணையணைந்தாலுங் கழிந்திடாது, தள்ளவேமாற்றதுவுஞ்சொல்லக்கேளு- தயவாகத்தண்ணீரிற் கழுத்துமட்டும், விள்ளவேநின்றக்கால் கெலிக்குந்தேகம் - விதமாகவெலுமிச்சம் பழத்தையுண்ணு, அள்ளவேபோகருட கடாட்சத்தாலே - அடைவாகப்புலிப்பாணி விளம்பினேனே. (௪௧)

வசியம்.

விளம்பியேயின்னமொன்று சொல்லக்கேளு-விதமானசூரியனூர் காத்திப்பூவும், தளும்பவேசெங்கழுநீர்ப் பூவினோடு-தயவான

முல்லைப்பூமாம்பூகூட்டி, குளம்பவேகோழியாவாரைப்பூவுங்-கொடிதானவெள்ளைக்காவளையின் பூவும், இளம்பவேசெவ்வலரிப் பூவுங் கூட்டிக்-கெணிதமுடன்கரிப்பான்சார் கூடச்சேர்த்தே. (௪௨)

சேர்த்தப்பாபூவையெல்லாஞ் சார்பிழிந்து-சிறப்பாகவோரொடையாயொன்றில்வாரு, பார்த்தப்பாகொப்புத்தேன்கூடச்சேர்த்து பண்பானகலவத்தி லலாக்கும்போது, கூர்த்தப்பாபெண்ணுடைய மதுவுங்கூட்டிக்-குணமானகொடுஞ்சினையுங் கூட்டியாட்டு, கோர்த்தப்பாபுழுகுடனேபச்சைப்பூரங்-கொடிதாக வகைவகைக்குவிராகன்காலே. (௪௩)

காலானவிதுவெல்லாமரைத்துமைபோல்கட்டாகச்சிமிழதனிலடைத்துக்கொண்டு, பாலானமயானமதில்தான்புதைத்து-பண்பாகமூன்றுநாள்மோகினியைமோது-சேலாகமுன்சொன்ன மந்திரந்தான், செப்புவாய்தினமொன்றுக்காயிரந்தான் - வாலாயமோகினியைப்பூசைசெய்து-வளமாகத்திலகமிடவசியம்பாரே. (௪௪)

பாரடாவையகத்துமாதரெல்லாம்-பார்த்தவுடன்மதிமயங்கிமுறையுங்கெட்டுச், சேரடாவென்பாருங்காலில்வந்து-சிறப்பாகவிழுவாரும்வணங்குவாரும், கூரடாகுலமழிந்துவலதுகெட்டுக்-குடிகெடுத்தகாமவெறிகொண்டுபின்னே, திரடாபொருள்கொடுப்பார்வேணமட்டும்-திறமானவசியமிது திண்ணந்தானே. (௪௫)

[கற்பம்]

திண்ணந்தான்கற்பமொன்றுசொல்லக்கேளு-திறமானவிழுதியிலைகிழங்குமுண்டு, வண்ணந்தானதையறிந்தெடுத்துக்கொண்டு-வளமாகக்கொண்டுவர மண்டலந்தான், நண்ணந்தான்காயசித்தியாகும்பாரு-நலமான வெள்ளறுகிந்தவிதம்பாரு, வண்ணந்தான் வேறில்லைகொத்தானுக்கு-வன்பாகலதினேரோகிழங்குண்டாமே (௪௬)

ஆகுமேகாயசித்தி மண்டலத்தில்-அப்பனேயாகுமடா கண்டுபாரு, போகுமேநோய்களெல்லாமகன்றுபோகும்-பொன்னுலகிற்றேவரெலாம்வசியமாவார், வாகுமேஜெகவசியமாகும்பாரு-வளமானசித்தரெலாங்கண்ணில்தோற்றும், நாகுமேபோகருட கடாட்சத்தாலே-நலமாகப்புலிப்பாணிபாடினேனே. (௪௭)

பாடினேனின்னமொன்றுசொல்லக்கேளு-பண்பானகாயசித்திசுறுக்குமெத்த, ஆடினேன்மலைதோறுமுண்டுவுண்டு-அடைவானபொற் சித்திற்கிழங்குமைந்தா, தேடியேயுண்ணநரைதிரையுமாறும்-தெளிவானவயசதுவும்வாலையாவாய், நாடியேபோகருடகடாட்சத்தாலே-நலமாகப்புலிப்பாணிசொன்னேன்பாரே. (௪௮)

ரசபற்பம்.

பாரப்பாரசபற்பஞ்சொல்லக்கேளு-பண்பானசுத்திசெய்துரசத்தையப்பா, சேரப்பாகுழியம்மிதன்னிற்போட்டுச் -சிறப்பானவிடத்தலையினிலைதான்வாங்கிக், கூரப்பாவாயிலிட்டுமென்றுமென்று-கூ சாமலும்மிநீரைவிட்டுஆட்டு, தீரப்பா நால்சாமமரைத்தெடுத்துத்-திறமாகவில்லைசெய்துரவியில்போடே. (௪௯)

போடப்பாவிடத்தலையைக்கவசங்கட்டிப்-பொங்கமுடனேட்டில்வைத்துச் சீலைசெய்து, சாடப்பாகுக்குடத்தல்வெளுத்துப்போகும்-சார்வாகவதையெடுத்துவைத்துக்கொண்டு, ஈடப்பாவியாதியென்றகுணத்துக்கெல்லா-மிதமாகப்பண வெடைதானென்றேயாம், நாடப்பாபனையினுடகருப்புக்கட்டி-நலமானபசுவின்வெண்ணெய்தேனுமாமே. (௫௰)

ஆமென்றேயாறுநாளிரண்டுவேளை - உப்பனேகொண்டவுடனெரிவுகாணும், வாமென்றவாவின்பால்நெய்யுமாகும்- வளமானசீனியுடனிளநீராகும்,தாமென்றகுளிர்ந்தநீர்வாருவாரு-தயவாகவினைஞ்சுழூவாறுக்கும், போமென்றபத்தியந்தானீராறப்பா -பொங்கமுடன்கொண்டபின்பு வியாதிபோமே. (௫௧)

(வசியமூலிகை.)

போமடாமூலியொன்றுசொல்லக்கேளு - பொங்கமுடன் மிளகுசாரணையின்மூலம், ஆமடாவெள்ளியிலேகாப்புக்கட்டி- அடைவாகப்பொங்கலிட்டுப்பலிகொடுத்து, தாமடாசத்தியில்தானடைத்துக்கொண்டு - தயவாகவணைந்திடவேபலனைப்பாரு, வாமடா பெண்களெல்லாம்வசியமாவார் - வந்தபெண்கள்தான்தியங்கி மயங்குவாரே. (௫௨)

(புருஷவசியம்.)

மயங்குவார்புருஷரெலாம் வசியமாவார்-மைந்தனேயூமத்தைபொன்னாங்கண்ணி, தியங்குவார்செம்முள்ளி சிவந்தகஞ்சா - திறமானசெங்குவளைப்பொன்னுவாரை, சயங்குவார்புழுகுசா ரமையோடு - கரியகோரோசனை புல்லாமணக்கு, வயங்குமிம் மூலியெல்லாஞ்சாறுவாங்கி - வளமாகச்சரக்கெல்லாம்விராகவென்றே. ()

ஒன்றான மூலிசெந்நாயுருவிமூலம் - உத்தமனே வகைவகைக்குவிராகன்சாறு, பன்றான குழியம்மிதன்னிலிட்டும் - பண்பாகமையைபோலேயரைக்கும்போது,நன்றாககொம்புத்தேன்காராவெண்ணெய் - கருவென்னசிற்றண்டமுடைத்துவிட்டு, நன்றாகச் சிமிழதனிலெடுத்துவைத்து - நாயகியாள்திலகமிடவசியமாமே. (௫௪)

வசியமப்பாபுருஷரெல்லாம்வணங்குவார்கள் - வளமாகக் கே ட்டதெல்லாமீவார்பாரு, உசிதமாய்ச்சேர்ந்தோர்கள் பிரியார்பாரு உத்தமனேயவள்வாசல்காத்துநிற்பாள், அசியமாய்க்காணுட்டால்ம யங்குவாளே - அழுதுநிற்பாள்சிணுங்குவாளேயோவென்பாள், நசி தமாயிருந்தபெண்ணும்ராதியேயாகும் - நிலைமகண்டால்மோகிப்பா ள் கண்டபோரோ. (௫௫)

(பல்லிவிழுதல்.)

பாரடாவுக்காலைப்பிடித்துவந்து - பாவியென்ற சத்துருதம் பலத்தைவாங்கி, சேரடாவதன்வாயிற்செலித்துப்போடு - செம்மை யாய்க்கருகூட்டிப்பேரும்நாட்டி, வீரடாபாதையிலேதலைமேலாக விதமானதலைவாசல்தன்னில்தாக்குச், சீரடாமண்டலத்திற்பற்களெ ல்லாஞ் - சிதரியேவிழுந்துவிடுந்திண்ணந்தானே. (௫௬)

(கண்கெடுதல்.)

திண்ணமாயின்னமொன்றுசொல்லக்கேளு - திறமான நீரட் டையரசன்பாலும், வண்ணமாய்ச்சீலையிலேதிரியதாக்கி - வஞ்சகமா ய்ச்சத்துருவின்விளக்கிற்போடு, நண்ணயமாய்த்திரியெரியவெதிரி கண்ணும் - நலமானதிஷ்டியதுமறைந்துபோகும், திண்ணயமாய் நாலெட்டுஅந்திக்காலம் - நினைவாகத்தாளெரிக்கக்குருடுமாமே. ()

வியாதியுண்டாக்குதல்,

ஆமடாமூஞ்சூறாப் பையாய்வாங்கி - யப்பனேயெதிரிநீர் ம லமிரண்டும், வீமடாஅதிற்செலுத்திப்பஞ்சவெட்டும் - வித்மான நரம்பதினுலிறுக்கிக்கட்டி, காமடாஓம்நமோபகவதிகாளி - தயவாக் யோகிநீசுவாகாவென்று, வாமடாலட்சமுருவோதசித்தி - வளமாக ப்புத்திகெட்டுவோதமாமே. (௫௮)

ஓதவேயின்னமொன்றுசொல்லக்கேளு - ஒளிவானகருநாபிப ச்சைநாபி, வாதடாவூர்தனிலேகாற்றுவாட்ட - வளமாக வெருவடுக் கிப்புடத்தைப்போடு, நாதடாபுதைப்பட்டமனிதரெல்லாம் - நடுந டுங்கிக்காய்ச்சலாய்வியாதிகொள்வார், ஆதடாஅவ்வூரில் நீதான்செ ன்றே - யவிழ்தத்தைத்தான்கொடுத்துத்தீர்ப்பேனெண்ணே. (௫௯)

தீர்ப்பதற்குநீலிவேர்சிறுகீரைவேரும் - திறமாகப்பிளகிட்டுக்கி யாழம்வைத்து, காப்பதுதான்பஸ்பமென்றுவிபூதிபோட்டுக் - கரு வாகத்தான்கொடுக்கமூன்றுவேளை, சேர்ப்பதடாமூவிரண்டுமொரு வர்சாணச் - செய்யாதேபாஷாணமாற்றென்பார்கள், ஆர்ப்பாகச் சொன்னபணம் கையில்வாங்கு - அன்பாகவின்னமொன்று சொல் ல்லக்கேளே. (௬0)

கேளடாகள்ளிச்சாற்கார்த்திகையின்மூலங் - செணிதமுடன்
பாஷாணர்துரிசுசேர்த்து, பாளடாநேர்வாளங் கறுத்தநாபி - பண்
பாகவிவையெல்லாம்பிடித்துத்தோண்டி, வீளடாகக்சலத்தைசிலையி
லேகட்டி - விதமானகழுத்தளவுதண்ணீருக்குள், ஆளடாதெரியாம
ல்கல்லைக்கட்டி - அடைவாகவுனாக்கிணற்றில்வைத்திடாயே. (௬௧)

வைத்தவுடனீர்குடித்தபேர்களெல்லா- வாந்தியும்பேதியுமாய்
மயங்குவர்கள், செத்தவுடனவ்வூரில்நீயேசென்று- செயலானதேவ
தைசணிறுத்தவேண்டும்-ஒத்தவுடனிறுத்திவைப்போமூருள்ளோரோ
யுத்தமனேபொன்கொடுப்பதின்னதென்று - நத்தவுடனதையெடுத்
தெரித்துபோடு, நலமானகிணற்றுநீரினாக்கச்சொல்லே (௬௨)

சொன்னபின்புகணபதிக்குவிடுதோறுஞ்- சொகுசாகநூறுகு
டஞ்சலத்தைவாரு, நன்னயமாய்நீலிவேரிடித்துத்தோண்டி நலமா
கக்கிணற்றிலறியாமற்போடு - இன்னபடிவிபூதியினை தியானித்தே
தா, னெல்லார்க்குநீகொடுக்கத்தெளிந்துபோகும்- அன்னபடியூரொ
ல்லாம்பொங்கலிட்டு, அடைவாகக்கடாய்வெட்டத்தீருமென்னே.()

துரிசுசுன்னம்.

தீருமேதுரிசுக்குவேணமட்டுந்- திறமாகவொருசட்டிவாங்கிவ
ந்து, வீருமேஉலசமதிற்சுன்னக்கல்லை-விதமாகக்காற்கலசமுள்ளே
போட்டு, நீருமேகட்டிதன்னை மேலேவைத்து-நிச்சயமாய்க்காற்க
லசங்கல்லைப்போட்டு,சீருமேபாஷாணமிடிச்சத்தண்ணீர்-சிறப்பா
கத்தான்றெளிப்பாய்சிறக்கத்தானே. (௬௪)

தானென்றஉலசமதிலோடுமூடித்- சயவாகமண்சிலைவலுவாய்
ச்செய்து,தேனென்றரண்டுமுழக்குழியைவெட்டிச்-சிறப்பானவா
னைலத்திகமுதைலத்தி,பானென்றகொடிக்கள்ளியயறுபோலே-பண்
பாகக்கொண்டுவந்து மூன்றுநேரே, கானென்றகுழிபாதி கலந்து
கொட்டி - கனிவாகஇருதலத்திக்கலந்துவையே. (௬௫)

வையப்பாகலசத்தையதின்மேலேநீ-வகையாக இருதலத்திகல
ந்துகொட்டி, செய்யப்பாகள்ளியுடன்கலந்தலத்தி-சிறப்பாகக்குழி
நிறையக்கொட்டிப்போடு, பையப்பாமண்போட்டு மூடிப்போடு-
பண்பானமண்டலந்தான் கழிந்தபின்பு, கையப்பா எடுத்ததனைத்தி
றந்துநீதான்-கருவாகக்காற்றில்லாவிடத்தில்வைத்தே. (௬௬)

வைத்தகட்டிதனையெடுத்துப்புதுச்சுன்னக்கல் -வளமாகப்பா
ஷாணச்சாற்விட்டாடிச், செத்தபின்பதையெடுத்துத்திறமாய்மூடி
ச்-செம்மையாய்மண்சிலைவலுவாய்ச்செய்து, பைத்தபின்புகுக்குட

த்திற்சுன்னமாகும்-பண்பானவதைபெடுத்துக்கவசம்வாங்கி, நைத்தபின்புடீங்கானில்வைத்துமைந்தா, நாயகனேகாற்றுடாவிடத்தில்வையே. (௬௭)

வைத்தபின்பெடுத்துப்பார் துரிசுசுன்னம் - வகைகயாகப்பொருமியதுசுண்ணூர்பாரும், செத்தபின்புசரக்கெல்லாம்பிதனுல்நீறும்-செயமாகுமிச்சுன்னம்ரசத்தில்போடு, நைத்தபின்புமிநீரால்மத்தித்தேதான் - நலமாகரவியில்வைக்கஇறுகும்பாரு, உய்த்துநீயுருக்கிடவே வெள்ளியாகும்-உற்றமுறைதப்பாது கண்டுபாரே. (௬௮)

வீரச்சுன்னம்.

பாரப்பாசாரமிட்டு வீரமோடு-பண்பாகக்காரமிட்டு பூரங்கூட்டுச், சேரப்பா துரிசுன்னஞ்செய்நீர்தானுஞ் -சிறப்பாகச்சரக்குகளையரைத்துப்போடு, வீரப்பாசரக்குகளுஞ்சுன்னமாகும் -விதமானசரக்குகளுஞ்செந்தூரிக்கும், தீரப்பாதனிதனியே வேதையாகும் - திறமானசெயநீரின்செய்கைதானே. (௬௯)

தானென்றவீரத்தைக்கலவத்திட்டுத்- தயவாகஇலைக்கள்ளியிலைச்சாற்விட்டு, தானென்றேயரைத்தவுடன் முசுருமுட்டை-சனிவாகத்தான்பிழிந் தரைத்துப்போடு, கோனென்றவில்லைகட்டி யுலரும்போது - கொடிதானசிற்றண்டங்கருத்தான்மஞ்சள், தேனென்றகருத்தடவிக்காயவைத்துத் - திறமானகள்ளியுடசாம்பல்வாரே. ()

வாரடாவைத்தெருக்கும்வகையைக்கேளு -வளமான நாழிகைதானிரண்டாம்பாரு, சீரடாகமலம்போ லெரிக்கச்சுன்னம் - செயமாகவாறவிட்டெடுத்துக்கொண்டு, பாரடாரசஞ்சேர்த்தே யுருக்கவெள்ளிப் - பண்பானசரக்கெல்லாம்பஸ்பமாகும்,சீரடாமூப்பூவைச்சேர்த்துக்கொள்ளத் திறமான நவலோகம்வேதையாமே, (௭௧)

வங்கவெட்டை.

ஆமடாயுருவியுப்புமேனியுப்பு - அடைவானவுமிநீர் தன்னுலாட்டி, தாமடாகருவங்கக்கட்டிக்கப்பா-தயவாகக்கவசமிட்டு மண்சீலைசெய்து, வாமடாகுக்கிடத்தில்வங்கவெட்டை - வளமாகத்தங்கமொன்றலிங்கமொன்று, காமடாவுருக்கியதைப்பின்னும்பாரு - கருவாகச்செம்பொன்று வெள்ளிமூன்றே. (௭௨)

மூன்றுடனே தங்கமொன்று தகடுதட்டி - முன்குருவில்விராகனெடையிதிலேசேர்த்து, என்றநீகொடுத்திடவே மாற்றேழாகும் - பிதமாகச்செந்தூரஞ்செய்தாற்கேளு, நான்றதோர் நவலோக வேதையாகும் - நாலாறுமாற்றுகுங் கண்டுபாரு, வான்றெருமூஞ்சீர்ப்போகருடகடாட்சத்தாலே - வழுத்தினேன்புலிப்பாணி விளங்கத்தானே. (௭௫)

விளங்கவேசிப்பியுட சுன்னந்தன்னில் - விதமானவெண்கார
ம்வைத்தெரித்து, துளங்கவேயதையெடுத்துநீராலே - சுகமாகத்
தானரைத்துக்காரீயத்தில், புளங்கவேகவசமிட்டுச் சிப்பிச்சுன்னம்
புகழுவேன்கீழ்மேலும்வைத்துமூடி, அளங்கவே யோட்டில்வைத்
துச்சீலைசெய்து - அடைவாகப்புடமிரண்டில்வெட்டையாமே. ()

ஆமப்பாநாழிகைதா னிரண்டாம்பாரு- அடைவாகமுன்வெட்
டைப்படியேசெய்நீ,வாமப்பாவங்கவெட்டை தங்கவெட்டை- வள
மானலிங்கத்தின் கட்டுசேர்த்து,தாமப்பாரசங்கெந்திகூட்டியேதா
ன்தயவாகச்செந்தூரஞ் செய்துபாரு - காமப்பாஎன்னசொல்வோ
ம்வேதைமார்க்கம், நவலோகமெல்லாமுந்தங்கமாமே. (௭௫)

சாரக்கட்டு.

தங்கவேதிருகுகள்ளிச் சாம்பல்வாங்கித்-தயவாகவீரோழுபலந்
தானப்பா,பங்கமிலாச்சிப்பிசுன்ன மீரோழாகும் - பாங்கானவெடி
யுப்புமீரோழாகும், அங்கமாய்ச்சாம்பலதுகீழேழாகு - மடைவான
சிப்பியதுகீழேழாகும்,சங்கரமா யுப்பதுவுங்கீழேழாகுஞ்சார்வாக
வடுக்கடுக்காயதனைவையே. (௭௬)

வையப்பாசாரமது பலந்தான்ரெண்டு - வளமாகவுப்பிட்டுமு
ன்போல்வைத்து, பையவேமண்சீலை யேழுசெய்து - பங்கானதீப
மொருசாமமப்பா,கையவேகமலமதுசாமமொன்று-கருதரியகாடக்
கினிசாமம்ரெண்டு, உப்பவேயாறவிட்டெடுத்துப்பாரு-உத்தமனே
தந்தம்போற் கட்டுந்தானே. (௭௭)

தாளடா நாகமது விராகன்பத்தி, தயவாகவுருக்கையிலேசாம
மிரண்டு - வேணடாகொடுத்திடவே நாகங்கட்டும்,விதமாகச்செம்பி
லேபத்துக்கொன்று - கோணடாவயசதுவு மெட்டதாகும், குணமா
கரசங்கெந்தி சேர்த்துமைந்தா-மாணடாசெந்தூரஞ் செய்தாயாணு
ல்,மைந்தனே நவலோகம்வேதையாவே. (௭௮)

சிறுகண்ணுகச்செந்தூரம்.

வேதையிலேயின்னமொரு போக்கைக்கேளு-வீறானசிறியக
ண்ணுகமப்பா, போதையிலேகருவங்கம் ரசமுங்கூட்டிப் பொங்கமு
டன்கெளரியப்பா விந்தநாலும்,ஆதையிலேசமனிடையாய்க்கூட்டி
நீயு -மன்பாகப்பனங்கள்ளிற்சாமநாலு, தீதையிலேபோற்கையான்
சாமநாலு,திறமையுடன்தானரைத்து வில்லைதட்டே. (௭௯)

தட்டியேயுலர்ந்தபின்போடுமூடித் தயவாகச்சீலைசெய்து கு
க்கிடத்திற்போடு - கட்டியேயாறவிட்டெடுத்துப்பாரு, களங்கமி

லாச்செந்தூர மென்னசொல்வேன்-தொட்டுநீசெம்பதுவு மேழுங்
கூட்டித்,தொழுதுவெள்ளியதுவுந்தான் மூன்றதாகும் - சட்டமாய்
க்குருவொன்றுதங்கமொன்று - சார்வாகக்கொடுத்தவுடன் வேதை
யாமே. (௮௰)

தாளகபஸ்பம்.

ஆகுமேதாளகத்தைச் சுன்னக்கல்லில்-அப்பனேயபூரிவிட்டு
ச்சுத்தியேழு,வாகுமேதும்பையிலைச்சாறுபடியொன்று - வளமான
சறுக்கிட்டுக்கட்டியொன்று, தாகுமேசாவல்ரத்த மிதக்கவிட்டுத்த
யவாகரவிதனிலேகாயக்காய - நாகுமோத்தமெலாங் கட்டியில்து
வட்டி,நலமாசக்காயவைத்தோடுமூடே. (௮௧)

மூடியேமண்சீலைவலுவாய்ச்செய்து - மூழப்புடத்திற்பஸ்ப
மாயிருக்கும்பாரு,வாடியேக்ஷயமெட்டும்விஷபாகங்கள்-வளமான
சோகையொடு பித்தப்பாண்டு, ஆடியேகாச்சலென்ற வகைகளெல்
லாம் - அப்பனேயெலிகடியும்பிரமைதீரும், நாடியேயோகருட க
டாட்சத்தாலே - தலமாகப்புலிப்பாணிபாடினேனே. (௮௨)

சலாசத்துபஸ்பம்.

பாடினேனுயுருவிபிலையையாட்டிப் - பண்பானசலாசத்துக்
கவசங்கட்டி, நாடியேசிலைசெய்துபுடத்தைப்போடு - நாயகனேப
ஸ்பமா யிருக்கும்பாரு, ஆடியேநிச்சயமா யித்தப்பஸ்பம் -அடை
வாகப்பாலையுடகிழங்குநீரில், சாடியேவெடியுப்பு விராகனொன்று
சார்வாகப்பஸ்பமொன்று கொடுக்கப்போமே. (௮௩)

போமப்பாசெம்பாலையனாத்துமைந்தா -பொங்கமுடன்கோ
ளியப்பாவதனில்விட்டு, ஆமப்பாவெள்வங்கம் வேணமட்டும் - அ
ன்பாகவுருக்கியொருசட்டிவைநீ, தாமப்பாநாட்டில்வைத்தெருவடு
க்கித் - தயவாகக்கெசப்புடத்திற் பஸ்பமாகும், வேமப்பா மேகம
து இருபத்தொன்றும் - விதமாகப்பணவிடைதான் வெண்ணெய்
யாமே. (௮௪)

லோகவசியம்.

ஆமய்யாறீம்ஐயுங்கிலியுமென்றே - அடைவாக ஸ்ரீம்உடனே
சவ்வுங்கூட்டித், தாமய்யாஇறீம்கிலீம் ஓமென்றுசொல்லித் - தான்
செபிக்கலட்சத்திற் சித்தியாகும், வாமய்யாவறுமையெலா மகன்று
போகும் - வளமானதேவதையு மன்னர்தாமும் - நாமய்யாலோக
மெல்லாம்வசியமாகும் - நலமாகத்தொழில்களெலாஞ்சித்திதானே

அஷ்டகர்மம்.

தாமென்றதலைமஞ்சங்கொடியுமாவுந் - தயவாகத்தான்பூசியு
லரப்போடு, ஊமென்றமுப்பூவும்ரவிமதியின்பீசம் - உத்தமனே

யுடன்கூட்டித் தயிலம்வாங்கி, ஆமென்ற அஷ்டகர்ம மெட்டெட்டுக்கும்- அடைவானதொழில்முறைக்குமெல்லாமாகும், நாமென்றபோகருடகடாட்சத்தாலே - நலமானபுலிப்பாணி பாடினேனே (

பாடினேன்சிவகிரியில் தண்டாயுதபாணி - பாருலகில்பூசித்தோர்சொல்லக்கேளு, ஆடினேன்பிரமாவுமீசனப்பா - அடைவானபோகருடகிருபையப்பா, நாடினேன் கவிபுகத்தி விருநூற்றைந்தில் - நாயகனேபுலிப்பாணி பூசித்தேன்பார், நீடினேன்பூசைமடந்தன்னில்வாழ்ந்து -நிலைபெற்றேன்போகருடவருள்பெற்றேனே

அருளாலேபிரமனுட லபியைத்தள்ளி - அடைவாகநாமிருந்தோங்கிரியில்வாழ்ந்து, தெருளாலேஷட்கோணத்தா லயமுங்கட்டி - நெறிவிளங்கஆண்டவனைநேசித்தேன்பார், பொருளாலே வெகுகோடிசித்துசெய்து - பூசைமடந்தனில்வந்துபோகநாதர், மருளாலேயாவரையுமயக்கியாட்டி - மதிமயக்கஞ்செய்யுமென்றார்வேலென்றாரே. (௮௮)

மூடமாக்குதல்.

வேலாலேயின்னமொருதொழிலைக்கேளு - விதமானகிராணமதுதீண்டும்போது, காலானஎட்டிமரங்காப்புகட்டிக் - கருவாகத்தூபமிட்டுவேரைவாங்கி, ஆலானநாகமதுவிடும்போதப்பா- அடைவாகவேறொன்றுவாங்கிவைநீ, சேலானமற்றவே குருப்போற்செய்து - செவ்வையாயுருத்தோறுந் துவாரம்போடே. (௮௯)

போட்டப்பாவிடுவேரைமுனைபோற்சீவிப் - பொங்கமுடன்பாவையுடமுனையுங்கொண்டு, ஆட்டப்பாசாவலது வெள்ளையாக - அடைவானநீருசே சென்றுநின்று, சாட்டப்பாசாவலது மெட்டித்கட்டிச் - சார்வாகத்தண்ணீரிற்கழுத்துமட்டும், நாட்டப்பா அசாரமதுசெபிப்பாய்லட்சம் நலமாகமுடிந்தவுடன்சாவல்சாமே, (௯௰)

சாகுமேசெபிக்குமட்டும் பாவைதன்னைச் -சார்பாகக்கைகவைத்துஜெபத்தைச்செய்நீ, சேகுமேசெதுக்குமுனைகூராதாகத் திரமானவெதிரியுட கருவைக்கூட்டி, ஆகுமேதுவாரமெல்லா முனையேநாட்டி - அடைவாகக்குற்றலாய்மூடமாய்ப்போவான், நாகுமேசத்துருவும்வணங்கிவந்தால் - நாயகனேமுனைபிடுங்கிநீராலாட்டே()

சூடன் - சுன்னம்.

ஆட்டடாசிப்பியுடசுன்னந்தன்னி - லடைவாகச்சூடனொருகட்டிவைத்து, நாட்டடாமேலுமிந்தச் சுன்னம்போட்டு - நலமாகச்சட்டிவாய்சீலைசெய்து, கூட்டடாகமலமது நாலுசாமம் - குணமாகவெரித்தவுடன் சுன்னமாகும், வாட்டடாஇந்தசுன்னஞ் சேற்றிற்போட - வளமானசுத்தசல மதின்மேலாமே. (௯௨)

கெந்தகதீர்,

ஆகுமேகெந்தகந்தான்பலந்தானைந்து - அடைவானகுழியம்மிதன்னிற்போட்டு, தாகுமேஎருக்கிலையின்பழுப்பின்சாறு - தயவாகத்தான்பிழிந்துசாமம்நாலு, வாகுமேவைத்தமட்டுமரைத்துமைந்தா - வளமானவம்மியினில்தானேவைத்து, நாகுமேபுதயத்திற்பார்க்கும்போது - ந[illegible]மாகச்சலமதனுளிழிக்கும்பாரே. (௯௩)

பாரப்பாசலந்தன்னைப்பதனம்பண்ணு - பக்குவமாயிம்முறையாயரைக்கும்போது, வீரப்பாராக்காலம் வைத்துப்பார்க்க - விதமானசலமதிலே யிருக்கும்பாரு, தீரப்பாவரைத்தரைத்துச் சலத்தைவாங்கிச் - சிவசிவாகுப்பியிலேயடைத்துக்கொண்டு, சாரப்பாலிங்கத்திற் சுருக்குபோடத் - தயவாகக்கட்டியதுவலுத்துப்போமே

போமேநீயரைத்தகெந்தி தன்னைவழித்துப் - பொங்கமுடன்பீங்கானில் ரவியில்வைக்கத், தீமேநீவெயிற்பட்டுத் தயிலமுண்டாம் - திரமாகச்சுருக்கிடவேசரக் கெல்லாங்கட்டும், தாமேநீரசத்துக்குத் தாக்கில்மைந்தா - தயவுடனேசமமாகவங்கங்கட்டும், நாமேநீ போகருடகடாட்சத்தாலே - நலமாகப்புலிப்பாணிபாடினேனே. (௯௫)

பாடினேன்ஞானமதுதொண்ணூற்றாறு - பண்பாகவயித்தியந்தானைந்நூறாகும், ஆடினேன்சோதிடந்தான்முந்நூறாகும் - அடைவாகவாடையதின்கூடச்சொன்னேன், கூடினேன்சண்முகத்தின்பூசைமார்க்கம் - குணமாகமுப்பதிலே கூறினேன்பார், நாடினேன்மதனநூல்கிருபையாலே - நலமானநூற்றெட்டைம்பதுவுமாச்சே

ஆச்சப்பாபலதிரட்டுநூறுமாக - அடைவானசிமிழ்வித்தைதயிருபத்தஞ்சு, வீச்சப்பாஜாலவித்தையிருநூற்றுள்ளே - விரும்பினூற்கண்ணாடிமுகமுமாகும், பேச்சப்பாசாஸ்திரத்தைப் பேணிப்பாரு - பேதமில்லைபேதமில்லை நூல்களியாவும், வாச்சப்பாபோகருடகடாட்சத்தாலே - வளமாகப்புலிப்பாணிவிளம்பினேனே. (௯௭)

வாலைரசம்.

விளம்பினேன்ரசம்வாங்கிக்குகையில்வாரு - விதமானகுகையதுவும்பறங்கிப்பூப்போல், சளம்பினேன்சாணத்தைவைத்துமூடில் - தானுமேரசமேறுஞ்சாணிக்குள்ளே, குளம்பியேசாணத்தைச் சலத்திற்போட்டுக் - குணமாகக்கரைத்தெடுக்கரசமுமாகும், கிளம்பியேவாலைரசம்போலேயாகும் - கிருபையுள்ளபஸ்பமுதலனைத்துமாமே. (௯௮)

ஆமப்பாசாஸ்திரத்தைவெளிவிடாதே - அவையடக்கம் வெகுபதனம்ஜயாவையா, வாமப்பாகாமிகட்குக் காட்டொணாது - வஞ்

சகர்க்கும்பொல்லார்க்குஞ்சொல்லொணாது, தாமப்பாதத்தைதாய் குருக்களானோர் - தயவாசமாதரொடுசிசுக்களென்னும், நாமப்பா இவர்களையேகொலைகள்செய்தோர்-நாசமாய்நரகத்தில்முழ்த்துவாரே

அழுந்தியேசாஸ்திரத்தை நிசமென்றெண்ணி - யடைவான் பெரியோரைவணங்கிக்காரு, நழுந்தியேபொய்யொன்றுஞ் சொல்லொணாது -நாகினுக்கேயாளாகாதிருப்பாயாகில், சொழுந்துயோலுன்னொளியைநோக்கிப்பாரு - கோபமொன்றுமாகாது குணமேவேணும், செழுந்தருவாம்போகருடகடாட்சத்தாலே - சிறந்தபுலிப்பாணிபல திரட்டுமுற்றே. (௩)

புலிப்பாணிபலதிரட்டுமுற்றிற்று,

ஸ்ரீபரதேவதார்ப்பணமஸ்து.

௨

சிவமயம்.

ஸ்ரீபரதேவதார்ப்பணமஸ்து.

புலிப்பாணிமஹாமுனிவர்

அருளிச்செய்த

ஜாலத்திரட்டு - ௨௱.

காப்பு - பாயிரம்.

சத்தியேதயாபரியேஞானநூலி
சாம்பவியேயனுன்மணியேகபாலிசூலி
முத்தியேவேதாந்தபரையேயம்பாள்
முக்குணமேமுச்சுடரேமாயாவிரி
வெற்றியேமூவருக்குமருளாய்நின்ற
வேணியேசாமளையேபொன்னே!பின்னே
சித்தியேஜாலமிருநூறம்பாடச்
சின்மயமாங்கணபதிதாள்காப்பாம்பாரே. (௧)

பாரப்பாஜாலமொடு சல்லியமொட்டியம்-பாங்கானதொட்டியத்தொட்டாவிசித்து, சாரப்பாநொடியானு மொடியான்வித்தை-

சார்வானகிரிகருணை யொட்டாரந்தான், காரப்பாசித்துலட்சங் கல்சடாவித்தை - கருவானகக்கிஷமும் பஞ்சபட்சி, வாரப்பாசினிவித்தை மாந்தரீகம்-வளமானபடுபட்சி கைவல்யமாமே. (௨)

ஆமப்பாபேதர்வண்ணான் கேசரியதீதம்- அடைவான அஷ்டகர்மம் வினோதகாரூடம்,தாமப்பாதண்டகம்லேபனமுஞ்சிப்பி தயவானஎட்சணியுந்தர்க்கசாஸ்திரம், போமப்பாபட்சணிநட்சணியுங்கூடப்-புகழ்பரதஞ்சோதிடங்கா வியத்தினோடு, நாமப்பாவயித்தியத்தோ டிலக்கணந்தான்-நல்லசூடாமணியு மின்னங்கேளே. (௩)

கேளடாசித்தராரூடங்கன்னம்- கெணிதமாய்சிமிழ்வித்தை கம்பிசூஸ்திரம், சூளடாசூனியமுர் திறவுகோலுஞ்- சுகமானமந்திரமு நறுக்குச்சல்லியம், வாளடாமதனநூற் சாஸ்திரந்தான்- வளமானபெருநூற்சல்லியமதாகும்,தாளடாவிருப்பென்ற கடலையப்பா-தயவாகமலைநிகண்டு சொல்லக்காணே. (௪)

காணவேசித்தகத்தியஞ் சல்லியமந்திரம்- கருவானகூட்டுடையகருத்தானப்பா, மாணவேஜாலமா நிகண்டுபாவை- மலைவளப்பமபூருவமாங் காண்டத்தோடு,ஊணவேகலைக்கியானம்ரேகைவித்தையுத்தமனேயாகமங்கள் விஸ்வாமித்திரம்,தோணவேயின்னம்வெகுநூல்களுண்டு-தொழிலானபோகருட வருள்தான்காணே. (௫)

காணப்பாவிந்நூலி லொன்றானாலும் - கனிவாகச்சித்திசெய்வோனவனே நாதன், ஊணப்பாபரதவித்துப் பார்த்துப்பார்த்தே-யுத்தமனேசித்திசெய்ய விதியில்லாதார், நாணப்பாசாஸ்திரத்தைப் பொய்யென்பார்கள்-நலமாகவிதியிருந்தாற் பலிக்கும்பாரு, ஆணப்பாஜகஜாலக்கூத்துக்கூத்து-ஆரறியப்போகிறாரப்பாகேளே. (௬)

கேளப்பாஞானமொடு பலதிரட்டுவாடை - கெணிதமென்றசோதிடமும்வயித்தியமுங்கூட,வாளப்பாசிதம்பரத்தின்பூசையோடு - வளமானதேவியுடபூசையப்பா, சூளப்பாசண்முகத்தின்பூசைமார்க்கம் - சுகமானசிமிழ்வித்தை கொக்கோகந்தான், வீளப்பா போகாதுசாலஞ்சாலம் - வெகுசுருக்கிதிருநூறுந்தெளிந்துபாரோ.

பாரடாஎந்நூல்தான்கோர்வையாகப் - பார்த்தவர்க்குப்பலனுண்டுசித்தியாகும், வீரடாபலதிரட்டிலைங்கோலந்தான் - விளம்பினோந்தயிலத்தையெடுத்துக்கொண்டு, சேரடாதொழில்முறைக்கெல்லாஞ்சேரு - செயமாகும்வித்தையெலாமென்னசொல்வேன், கூரடாகண்கட்டுவித்தையொன்று - கூறுகிறேனன்றாகக்கேளுகேளே

பாயிரம் - முற்றும்.

நூல்.

கண்கட்டுவித்தை.

கேளேநீயூர்க்குருவிபிடித்துவந்து- செணிதமாயபானத்தைத்தைத்துப்பின்னே, சூளேநீகால்களஞ்சிகுதம்பாரு சுகமாகக்கால்கழுஞ்சிவெள்ளையோடு,வாளேநீவாயைத்தான்தைத்துப்போடு - வனமானசிறுபானைக்குள்ளேபோடி, பாளேநீபோகாமற்படிதான்கள்ளுபாங்காகத்தான்வாத்திட்டெரித்திடாயே. (௯)

எரிப்பாயேயொருமரத்துவிறகுகொண்டு - எட்டொன்றாய்கரிக்கியேபதைத்தைபார்த்து, தெரிப்பாயே ஆஸ்தி முதலுரோமந்தன்னித்-தெளிவாகத்தானெடுத்து கலவத்திட்டுச், செரிப்பாயேபேய்க்கருப்பன் சாற்றைவிட்டுச் - சேர்த்தரைப்பாய்மைபோலேயாகுமட்டும், விரிப்பாயே துணிமேலேபரத்திமைந்தாவிதமாகக்காயவிட்டுத்திரியாய்ச்சுற்றே. (௰)

சுற்றப்பாஜவ்கோலத்தயிலம்வாரு - சுருக்காகச்சிரசோட்டில்மையையவாங்கி,சிற்றப்பாதயிலத்திலிழைத்துநன்றாய் - சிமிழில்வைத்துஜாலக்காள் பூசைசெய்து, அற்றப்பாமையெடுத்துவித்தையாட - அடைவாகச்சொல்லுகிறே னன்றாய்க்கேளு, முற்றப்பாபச்சைவைக்கோல் தன்னில்தேய்த்து-முன்போடப்பாம்பாகுங் கண்டுபாரே. (௰௧)

பாரடாபுளியிலைக்குக்குளவியாகும்- பண்பானவேப்பிலைக்குத்தேன்தேளாகும்; சீரடாநட்டுவக்காலியாகும்-சிறப்பானபலகுருவிசிறகிற்பூசில்,கூரடா அந்தந்தப்பட்சியாகும் - குணமானவோட்டிலிட்டுவாகனாகும்,வீரடாமண்கிள்ளிப்பூசினாக்கால்விதமானகெந்தபொடிவாசந்தானே. (௰௨)

தானென்ற அம்மியிலே பூசினாக்கால் - தயவாக அம்மியது நடக்கும்பாரு, ஊனென்றகழற்சிக்காய் வேணமட்டும் - உத்தமனேபூசியதைக் கீழேபோடு, கோனென்ற கழற்றிக்காய் மோதிக்கொள்ளும் - கொற்றவனேசிறுசிலைக்கு மிந்தப்பாகம், தேனென்றபோகருட கடாட்சத்தாலே - தெளிவாகப்புலிப்பாணி பாடினேனே. (௰௩)

ஜாலக்காள்பூசை.

பாடினேன்ஜாலக்காள் பூசைமார்க்கம்பண்பானமஞ்சளின்கிழங்குபாவை - சூடிநீபெண்போலரூபஞ்செய்து, சுகமாகக்கோடிமூலமேலேசுற்றி-ஆடியேபூசையப்பாசத்திபூசை, அடைவாகச்செ

ய்துபின்தியானமோது-தேடியேசாகினிடாகினி ஜாலக்காள்,தேவி தீராராராராவென்றேதே. (௰௪)

ஓதவேமந்திரந்தான்லட்சமோது-உன்னிடத்தில்விளையாடியிருப்பாள்பாரு,வாதவேயிவளுடையஜாலஞ்சாலர்-வையகத்தோர்மதிமயங்கியிருப்பாரப்பா, சூதுதான்சொல்லவில்லைச்சாலவித்தை-சொன்னபடிதானுடுங்கண்டுபாரு, நாதனூர்போகருடகடாட்சத்தாலே-நலமாகப்புலிப்பாணிபாடினேனே. (௰௫)

பச்சைப்பாம்புவித்தை

பாடினேனின்னமொன்றுசொல்லக்கேளு-பண்பானபச்சையென்றபாம்பைக்கொன்று, ஆடியேயதின்வாயிற்கொட்டைமுத்துஅப்பனேபூநூலின் பருத்திக்கொட்டை-கூடவேயடுக்கடுக்காய்செலுத்திப்போடு,குணமாகமண்ணிட்டு நீராவாரு - மூடியேவித்தெடுத்திந்தப்பாகம்,மூன்றுதிரம்போட்டுநீயெடுத்துக்கொள்ளே.

கொள்ளப்பாமூன்றுதிரங்காச்சமுத்தின்-குணமானஎண்ணெய்யைவடித்துக்கொண்டு, தெள்ளப்பாமூன்றுதிரம்வெடித்தபஞ்சு-தெளிவாகத்தனெடுத்துத் திரியாய்ச்செய்து, கள்ளப்பாதிரியெடுத்துவிளக்கிலேற்றிக்-கனிவாகவைங்கோலத் தயிலஞ்சற்றே,அள்ளப்பாவிளக்குதனிலிந்தயெண்ணெய் - அடைவாகத்தான்வார்த்துதீபமேற்றே. (௰௭)

ஏற்றப்பாராக்கால மனிதர்கூட்டம்-இருக்கையிலேபொருத்திவிடு பாம்பாய்த்தோணும், கூத்தப்பாவெகுபாம்பு பச்சைப்பாம்புகொற்றவனேவெகுபேர்கள் மிரளுவார்கள், தாத்தப்பா திரியணைக்க மறைந்துபோகும் - சமர்த்துதானென்சொல்வே னிந்தவித்தை, ஆற்றப்பாபோகருடகடாட்சத்தாலே- அடைவாகப்புலிப்பாணிபாடினேனே. (௰அ)

மூலிகைஜாலம்.

பாடினேனின்னமொரு ஜாலவித்தை - பண்பாகச்சொல்லுகிறேனென்றுக்கேளு, ஆடியே யிருளன்றமூலிதன்னை - அப்பனேகாப்பிட்டுப்பிடுங்கிவேரை, நாடியேகாதிலேவைக்கும்போது - நலமாகவொருபொருளைச்சொல்லிவைத்தால், கூடியேயவ்வண்ணரூபமாகும் - குணமானவதன்பெருமைகூறக்கேளே. (௰௯)

கேளடாபுலியாவாய்கரடியாவாய் - கெடியான குரங்காவாய்மந்தியாவாய், நாளடாஎருமைமுதலெருதுமாவாய்- நலமானஆனையொடுநாயுமாவாய், ஆளடாபூனையொடுகோழியாவாய் - அடைவானகுதிரையொடுகழுதையாவாய், வாளடாபன்றியாய்மானுமாவாய்வளமானஆடுமரங்கல்லாவாயே. (௨௰)

ஆவாநீயாணுவாய்பெண்ணுமாவாய் - அப்பனேராஜனொடுகு
ருவுமாவாய், தாவியேசித்தரொன்றமுத்தராவாய்-தபோதனர்கள்வே
தியர்கள்தாமுமாவாய், வாவியேகுளமாவாய்கிணறுமாவாய்-வளமா
னபாம்பாவாய்பட்சியாவாய், மேவிநீதினைத்தபடி யெல்லாமாவாய்-
மேதினியிலின்னமொருபுதுமையாமே. (௨௧)

ஆமப்பாஇச்சாலஞ் சுறுக்குமெத்த - ஆரறியப்போகிறு ரரு
மைமெத்த, காமப்பாபுண்ணியருக் கெய்தும்பாரு - கன்மிகளுக்
கெந்நாளுங் காணுதப்பா, தாமப்பாஇம்மூலி காய்ந்ததாணுல்-தயி
லம்பிட்டுக்காற்றில்வைக்க விரமாகும், வாமப்பாபோகருட கடாட்ச
த்தாலே-வளமாகப்புலிப்பாணி பாடினேனே. (௨௨)

தெய்வஜாலம்.

பாடினேனின்னமொன்று சொல்லக்கேளு-பாங்கானசிறுமு
ன்னை காப்புக்கட்டி, ஆடியேபொங்கலிட்டுத் தூபதீபம்-அப்பனே
பலிகொடுத்து வேரைவாங்கி, கூடியேபொடியாக்கிக் கருச்சீலைத
ன்னில்-குணமாகத்திரியாக்கி யைங்கோலத்தால், வாடியேவிளக்கிட்
டுத் தீபந்தன்னை, வளமாகஆவினெய்யி லேற்றிடாயே. (௨௩)

எற்றியேகோயிலுக்குள் மாளிகைக்குள் - இன்பமதாய்த்தானி
ருக்கு மிடத்திலப்பா, பாத்தியேமனுக்களைத்தான் வரவழைத்து-
பாரொன்றுசொல்லிவாய்மூடுமுன்னே, வாத்தியேதேவரொலாங்கண்
ணிற்காணும்-வையகத்தோர்தான்மயங்கிப் பார்ப்பார்பாரு, சாத்தி
யேதிரியணைக்க மறையும்பாரு - சார்வாகப்போகருட கடாட்சந்
தானே. (௨௪)

சீலைக்குடைபிடிக்க.

தானென்றகருவீழி காப்புக்கட்டி - தயவாகப்பொங்கலுடன்
பலியுமிட்டு, தேனென்றதிக்குபந் தனமோரொட்டுஞ்-செய்தவுடனே
தைவெட்டிக் கிழங்குவாங்கி, கோனென்றசோமனிலே விராகனொ
ன்று-குணமாகத்தானறுக்கி முடிந்துக்கொண்டு, வானென்றஆகாச
ந் தன்னிற்போட-வளமாகக்குடைபிடித்து வரும்நீபாரே. (௨௫)

எலுமிச்சம்பழவித்தை.

பாரேநீஇன்னமொன்று சொல்லக்கேளு-பாங்காகக்கர்த்தபந்
தான் புணரும்போது, சேரோவால்மயிரைவெவ் வேறேவாங்கித்-தி
கழுமோதிரம்போல்வெவ் வேறேசுற்றித், தேரோநீபைங்காய மே
லேபூசித்-திரமாகத்தங்கத்தைமேலேசுற்றித், திரோநீவலவிரலிலாண்
தானப்பா-திடமாகஇடவிரலில்|பெண்தான்காணே. (௨௬)

காணப்பாஎலுமிச்சம் பழத்தைவாங்கிக்-கனிவாகவாகாசந் த
ன்னிற்போடு, மாணப்பாஇட்டக்கையைக் கீழேமூடு - வானிலுள்ளக

னியதுவும் விழாதப்பா, தாணப்பாஇடக்கையை திமிர்த்திக்காட்ட
த்-தான்விழுங்கனியதுதான் கண்டுபாரு, வேணப்பாபோகருட க
டாசத்தாலே - விதமாகப்புலிப்பாணி பாடினேனே. (௨௭)

நோக்குவித்தைகள்.

பாடினேனின்னமொன்று சொல்லக்கேளு-பன்பானகுன்று
டைய தாங்கிமூலம், நாடிநீகொழிஞ்சியது போலேயப்பா-நாட்டி
லேமெத்தவுண் டறிபார்பாரு, கூடியேயதைச்சுருட்டி மேலேயப்
பா-குணமாகஆள்பாரங் கல்லைவைக்க, ஆடியேபார்த்திருக்க அத்த
க்கல்தான்-அப்புறத்திற்போய்விழுங் கண்டோமே. (௨௮)

பாரடாகிராணமது தீண்டும்போது - பண்பாகக்சாப்பிட்டுப்
பொங்கலிட்டு, சீரடாபலியிட்டுத் தூபதீபம்-செயமாகக்கொடுத்து
ம்பிக வேணாவாங்கி, திரடாகுளிசமா யாடிக்கொண்டு-திரமாகச்சிர
சுதனில் வைத்துநீயும், கூரடாபாரமதை யேற்றிப்பாரு-குணமாக
த்தானெடுக்கக் கனக்காதன்றே. (௨௯)

கனக்காதுஉலக்கைமுதல் கட்டிலையா - கனிவானபல்லாக்கின்
கொம்பினோடு, அனக்காதுஇதுகளெலாம் நோக்கும்போதி-லப்ப
னேவாயிலிட்டு நோக்கிப்பாரு, இனக்காதுஆனையைத்தான் வாலை
ப்பற்றி-இழுத்தாக்கால்பின்னகர்ந்து வருநீபாரு, நனக்காதுகல்லை
த்தானுதைத்தாயானால்-நகருமப்பாபெரும்பாரம்பின்னைத்தானே ()

தானேதானின்னமொன்று சொல்லக்கேளு- தயவாகச்சவத்தி
னுட வாயினுள்ளே, மானேதானிருப்பாணி யுள்ளேவிட்டு-மைந்த
னேமார்பினில்தான் வெள்ளியாணி,தேனேதானுந்தியிலே செப்பி
னாணி-தெளிவாகத்தானெடுத் தின்னங்கேளு, வானேதான்சவங்கி
டந்து வெந்தபின்பு-வளமாகமறுநாளி லெடுத்துக்கொள்ளே. (௩௧)

கொள்ளவேகாடாற்று முன்னே நீயுங் - குணமாகத்தானெடுத்
துப் பூசைசெய்து, தெள்ளவேபிரம்பில்வெள்ளி கட்டாய்போடு-
தெளிவாகவிரும்பதனை முன்னேபோடு, கள்ளவேசெம்பதுதான்
பின்னேபோடு-கடிதாகவிவ்வகைநீ செய்துபின்பு, அள்ளியேயைங்
கோலக் கருவும்பூசி-அடைவாகசாலக்காள் தியானமோதே. (௩௨)

ஓதியேலட்சமுரு முடிந்ததானு - லொளிவாகச்சாலக்காள் பூ
சைசெய்து, வாதாகப்பிரம்பதனை யெடுத்துக்கொண்டு-வளமாகப்
பாம்பிருக்கும் பெட்டிமேலே, காதியேயன்பாகத் தட்டும்போது-
காணுதுபாம்பெல்லாங் கண்டுபாரு, தாதியேபிரம்பைத்தான் திரு
ப்பித்தட்டத்-தானிருக்கும்பெட்டியுள்ளே பாம்புதானே. (௩௩)

வாத்தியஜாலம்.

தானேதானின்னமொன்று சொல்லக்கேளு-தயவானபள்ளிய
ர்கள் மரணமானால், கோனேதானவர்கள்கை விரும்பினாலே-கொ
ற்றவனேவலையலது போட்டிருப்பார், தேனேதானவர்களைத்தான்
தகனம்பண்ணிச் - செருகையில்வலையலுடன் வைப்பார்பாரு, மா
னேதான்காடாற்றி முன்னேயப்பா-வகையாகத்தானெடுத்து வைத்
துக்கொள்ளே. (௫௪)

கொள்ளப்பாபாக்குவெட்டி யதனாற்செய்து-கொற்றவனேகி
ராணமது தீக்கும்போது, தள்ளப்பாசங்கம்வேர் காப்புக்கட்டித்-
தயவாகபலிபூசை நடத்தியப்பா, தெள்ளப்பாவடவேரை வாங்கிக்
கொண்டு-தெளிவான வைங்கோலக்கருவுப்பூசி, கள்ளப்பாக்குவெ
ட்டி தன்னால்வெட்டிக்-கனிவாகவதின்பெருமை சொல்லப்பாரே.()

பாரடாபேரிகையுநகபத்தோடு - பண்பானநகாருமுசலடங்க
த்தானும், சேரடாதம்பட்டங்கனகதப்பு-செயலானதவிலோடுகவ
ண்டையப்பா, கூரடாதுத்திமல்லாரிதாரை-குணமானபம்பையொ
டுபூரியப்பா, சீரடாசந்திரவாத்தியஞ்சூரியவாத்தியம் -தெளிவானவு
டுக்கைமுதல்முழங்குந்தானே. (௫௫)

தானென்றகிடுதுமுட்டிதப்பினோடு - தயவாகஇன்னம்வெகு
வாத்தியங்கள், கோனென்றவேளாத்தானடுக்கடுக்காய் - கொற்றவ
னே வெட்டுகையில்முழங்கும்பாரு, தேனென்றவாத்தியத்தின்சா
லஞ்சாலம்-தெளிவாகக்குருமுறையாய்த்தெளிந்துசெய்நீ, ஆனென்ற
போகருடகடாட்சத்தாலே-யடைவாகப்புலிப்பாணிபாடினேனே.

எக்காளஜாலம்.

பாடியேயின்னமொருவித்தைசொல்வேன் -பண்பாய்ஆம்ஓம்
நமசிவாயவென்று, ஆடியேலட்சமுருஜெபித்தாயானால்-அப்பனே
ஜாலக்காள்பூசைசெய்து, கூடியேநத்தமரக்குரிவேரைக் - கொண்
ண்டுவந்தேயைங்கோலக்கருவும்பூசி, நாடியேமுந்தியிலேவைத்து
நீயும்-நலமாகநீட்டியதைமுருக்குவாயே. (௫௬)

முருக்கையிலேமந்திரத்தைத் தியானமோது- முனிவாகமண்
ணெடுத் தெதிரேபோடு, துருக்கையிலேயெக்காளந்தாரைசின்னம்-
எளிதானகர்ணாவும் வாங்காதப்பா, திருக்கையிலேநாகசுரங் கொம்
பினோடு-தெளிவானமகுடியொடுசெங்கநாதம், கருக்கையிலேயிதுக
ளெல்லாம் படைக்கும்பாரு-கனிவானபோகருட கடாட்சந்தானே.

அக்கினிஜாலம்.

தானையாஇன்னமொருவித்தைசொல்வேன்-தயவாகப்பச்சை
யென்றதவளைநெய்யில், மானையாகலசத்தில்வைத்துக்கொண்டு-மை

ந்தனே துணியதிலே துவைத்துமைந்தா, வானையாமண்வெட்டி ப
ழுக்கக்காச்சி-வளமானவுரலின்மேல் வைக்கச்சொல்லித், தேனையா
எண்ணெயிலே கையைதோய்த்துத் - திறமாகத்தானடிப்பா யின்ன
ம்பாரோ. (௪௰)

பாரடா அனைவோரும் பார்த்திருக்கப் - பண்பாகத்துணியதி
லே துடைத்துப்போடு,தேரடாஎண்ணெயிலே தோய்த்துத்தோய்
த்துத்-தெளிவாகத்தானடிப்பாயனைவோர்பார்க்கச், சீரடாகுண்டத
னைக் காச்சச்சொல்லி-சிறப்பாகவாய்தனிலே யிந்தவெண்ணெய்,தீ
ரடாநிரம்பவிட் டுமிழ்ந்துவிட்டுத், திறமானகுண்டதனைக் கடித்து
த்தூக்கே. (௪௧)

தூக்கப்பாவனைவோரும்பார்க்கும்போது - துணிவாகவைக்
கோலிலைவத்துக்கட்டி, வாக்கப்பாவைக்கோலி லெண்ணெய்தோய்
த்து - வகையாகத்தான்கட்டிமுன்னேபோடு, போக்கப்பாவைக்
கோல்தான்வேகாதப்பா- பொலிவாகத்தானவிழ்த்துப்பின்னுங்கே
ளு, தாக்கப்பாவைக்கோல்மேல்போட்டாயானுல் - தயவாகத்தான்
பிடித்துவேகும்பாரோ. (௪௨)

பாரடாசங்கிலியைக்காயப்போட்டு- பண்பாகநெய்யெடுத்து
ருக்குவாய்நீ, சீரடாபாதத்திற்றடவிக்கொண்டு- சிறப்பாகவக்கினி
மேல்நடக்கலாகும், கூாடாகைதனிலேதடவிக்கொண்டு - குணமா
னவக்கினிசட்டிதன்னை, வீரடாவெடுக்கலாங்கண்டுபாரு - விதமா
னபோகருடகடாட்சத்தாலே. (௪௩)

ஜலஸ்தம்பனம்.

தானுன இன்னமொருவித்தைகேளு-தயவாகச்சலதிரட்டுங்கூ
ட்டுமூலி, வானுகவுலர்த்தியதைதூளாய்ச்செய்து-வளமானஜங்சோ
லத்தயிலந்தன்னில், மானுகமைபோலேயரைத்துமைந்தா-மருவுபா
தக்குறடுதன்னிற்பூசிக்,கோனுகத்தண்ணீர்மேல்நடக்கலாகுங்,குள
ங்கிணறேயல்லாமலாறுகாதே. (௪௪)

ஆறுனவாசனங்கள்தன்னிற்பூசி-யப்பனே சலத்தின்மேலிரு
க்கலாகும்,கூறுனஇந்தவித்தைபுதுமைமெத்த - கொற்றவனேயுல
கத்தோர்நாதனென்பார்,தேறுனஇந்தஜாலந்தான்ஜாலம்-தேறிநின்
றூற்சகலசித்துங் கைக்குளாகும்,வீறுன போகருடகாடாட்சத்தா
லே-விதமாகப்புலிப்பாணிபாடினேனே, (௪௫)

பச்சைதவளைவித்தை.

பாடினேனின்னமொருவித்தைகேளு-பண்பானதவளையைத்
தானரவங்கவ்விக்,கூடியேபிடித்திருக்கும்வேளைபார்த்துக் -கூசமா
ற்றலேவிழவெட்டிப்போட்டு - ஆடியேயரவுடையதலையுங்கூட, அ

டைவானதவலையுந்தானெடுத்துக்கொண்டு,நாடியேமரங்கிரிச்சுப்ப
ட்டைகொண்டு-நலமானவைங்கோலத்தயிலங்கூட்டே. (௪௬)

கூட்டியேசகலாத்தில்வைத்துத்தைத்துக்- குணமாகவுரலின்கீ
ழ்வைத்துக்குத்து, நாட்டியேகுத்தையிலேவாயும்போகும் நலமா
கவதையெடுத்துவைத்துக்கொண்டு - ஆட்டியேயிப்பாகம்நினைத்த
போது,அடைவாகச்செய்துவிளையாடிப்பாரு,வாட்டியேயவமான
ப்பட்டுபோவார்-வையகத்தோர்தான்பார்த்துநகைப்பார்பாரே. ()

சிலைத்திரைய.

பாரடாகர்த்தபந்தான் புணரும்போது-பரிவாகவான்கழுதை
வாலுரோமம்,சீரடாபிடுங்கியதை வைத்துக்கொண்டு - சிறப்பானக
ண்ணில்லாப்புற்றுமீதில்,திரடாகட்டுடையகொடிதானப்பா-திறமா
கக்கிராணத்தில்காப்புக்கட்டி,கூரடாபலிபொங்கல் தூபதீபங்-கொ
டுத்துநீகொடியதனைப்பிடுங்கிக்கொள்ளே. (௪௮)

கொள்ளவேவலையமாய்சுருட்டிக்கொண்டுகுணமாகரோமமு
ங்கூடவைத்தே-தெள்ளவேதங்கத்தால் வெள்ளியாலும்,தெளிவாகத்
தண்டினுடமேலேசுற்றி-கள்ளப்பர்சுற்றுமுனேகருவும்பூசிக், க
னிவாகச்சாலக்காள்பூசைசெய்து - மெள்ளவேசையதனிலேலற்றும்
போது-மேன்மையாய்ச்சிலையது திரையும்பாரே. (௪௯)

தீவட்டிஜாலம்.

பாரப்பாவெட்டுண்டமுண்டந்தன்னைப்- பதித்திருக்குமிடம்
பார்த்துஊனைவாங்கி,நேரப்பாதிகைப்பூடுபொடித்துப்போடு-நே
ரானவைங்கோலத் தயிலஞ்சேர்த்து,திரப்பாதீவட்டிதனில்நனைத்து
தீரமாசப்பொருத்திவிளக் கெண்ணெய்வாரு,வீரப்பாராக்காலமனி
தர்கூடி-விருகவிருக்கையிலே சொல்லக்கேளே. (௫௰)

சேளடாதீவட்டிதான்பிடிக்கக்-கேட்டுதடாவனைவோருமுண்
டமாவார்,நாளடாகூட்டங்க ளோடிப்போகும் - நாமென்னசெய்வ
மென்றுநகைப்பார்பாரு,சூளடாஎன்னவிதியிந்தக்கூத்து-சொல்ல
லாமென்பார்களனைவோருந்தான், ஆள்டாஇந்தஜாலந்தான்சாலம்-
அத்தனூர்போகருடசடாட்சந்தானே. (௫௧)

எட்சணிஜாலம.

தானுனபச்சோந்திப்பிச்சைவாங்கித்- தயவாகத்திசைமயக்கப
பொடியுங்கூட்டி, மானுனமதிமயக்குத்தூளுங்கூட்டி - மத்தம்வே
ர்த்தோலதுவுங்கூடச்சேர்த்து, வானுனஐங்கோலத்தயிலத்தாட்டி-
வளமாகச்சிமிழதனில்வைத்துக்கொண்டு, கோனுனமோகினியைத்
தியானஞ்செய்து-குலமானஜாலக்காள் பூசைசெய்யே. (௫௨)

செப்பப்பாமாயமோகினி நமாவென்று- செயலாகத்திலகமி டப்பெண்போல்தோன்றும், வையப்பாவுலகத்தோர் வாய்வரண்டு மதிமயங்கிமோகித்து நிற்பார்பாரு - ஐயப்பாரம்பையூர் வசிப்பெ ண்தானே, அடைவானதிலோத்தமையோதெய்வப்பெண்ணோ- கை யப்பாமிடிப்பாருங் காலில்வந்து - கனிவாகவீழ்வாருங் கண்டு பாரே. (௫௩)

பாரடாதிலகத்தை யழித்தபோது - பண்பானபெண்ணையல் லோகாணோமென்பார், வீரடாஇந்தமங்கையுலகிலுண்டோ-விதமா னமேதினியிற்காணலசமோ.தீரடாமனம்பதறிபழுவார்பாரு- தெய் வமேயென்றுசொல்லி மயங்குவார்காண், நீரடாஇப்பெண்ணைநினை த்தபோதே-நெஞ்சுருகிவேகுதென்று புலம்புவாரே. (௫௪)

வாரான இன்னமொருவிந்தையப்பா - வளமானயெட்சணியி ன்மார்க்கங்கேளு,கூரானஸ்ரீம்இதிகிலியுமென்று- குணமான அவ்வு முவ்வுமவ்வுஞ்சேரு, வீரானநமசிவயவென்றுநீயும்- விதமாகஓமெ ன்றுசொல்லிப்பின்னை, சீரானசுகந்தபரி மளஞ்சாதிக்காய் - திறமா னகிராம்புவால்மிளகுதானே. (௫௫)

மிளகோடு அடைக்காய்சற்கரைகற்கண்டு - மிதமில்லாக்கனிவ கைகள் பலகாரமன்னம், அளகோடுஇவையெல்லாம்வேண்டுமென் றே - அடைவாகஎட்சணியின்தியானமோது, புளகோடுதொட்டா க்கால்மூலிகைக்குப்-பொங்கமுடன்வெள்ளிநாள்காப்புக்கட்டி,நள கோடு எட்டுநாளந்திசந்தி - நலமாகயெட்சணியின் தியான மோதே. (௫௬)

ஓதியபின்பொங்கல்பலி தூபதீபம்-ஒளிவாகத்தான்கொடுத்து வேணாவாங்கி,ஆதியானமங்கோலக்கருவும்பூசி - அடைவாகக்கருச்சீ லைமேலேசுற்று,நாசியேதங்கத்தா லடைத்துக்கொண்டு-நலமாகயெ ட்சணியை லட்சமோதி,திதிலாப்பூசைபலிபலக்கச்செய்து - செய லானவிவையெல்லா மழைப்பாய்பாரே. (௫௭)

பாரப்பாசபைநடுவே யிருந்துக்கொண்டு-பண்பானமுக்காடு போட்டுநீயும், சீரப்பாநீலகண்டித்தியானமோது-சீக்கிரத்திற்கொ ண்டுவருமெட்சணித்தான், கூரப்பாஎல்லார்க்குங்கொடுக்கச்செய்நீ குற்றம்வருமீயொன்றும்புசிக்கவேண்டாம், நேரப்பாபோகருட கடாட்சத்தாலே-நிச்சயமாய்புலிப்பாணிபாடினேனே. (௫௮)

மாம்பழஜாலம்.

பாடினேனின்னமொருவித்தைகேளு பரிவானவேரழிஞ்சிவி த்தைவாங்கி-ஆடியேபூத்தயிலமாகவாங்கி, அன்பாகமாங்கனிதான் கொம்பிலப்பா- குடியேகனிந்தபழங்கொண்டுவந்து,சுகமாகப்பிழி

ந்ததனைத்தோலைநீக்கிக்- கூடியேலையங்கோலக்கருவுங்கூட்டிக்குணமானதயிலத்திலூறப்போடே. (௫௯)

போடப்பாஒருநாள்தான்கடந்துவாங்கிப் - பொங்கமுடனிழலுலர்த்திவைத்துக்கொண்டு, நாடப்பாசபைதனிலே யிருந்தக்கொட்டை-நலமாகயாவருக்குங்கண்ணிற்காட்டி, சாடப்பாகுழிதோண்டிவித்தைநட்டுச்-சார்வாகச்சலம்வார்த்துக்கூடைமூடு, சூடப்பாநாலுதிறந்தண்ணீர்வாரு-சுகமாகநாலுதிறந்திறந்துமூடே. (௬௰)

மூடவேயிலையாகிக்கொழுந்துமாகி- முக்கியமாய்த்தழையாகிப்பூவுமாகித், தேடவேபிஞ்சாகிக்காயுமாகித் - தெளிவானகனியாகியுதிரும்பாரு, ஆடவேயனைவருக்குங்கொடுக்கச்செய்நீ - அப்பனேநாழிகைதான்மூணேமுக்கால், கூடவேயிதற்குள்ளேமரமுமாகிக்- குணமானகனியாகியுதிருந்தானே. (௬௧)

இந்திரஜாலம்.

தானேதானின்னமொருசாலவித்தை-தயவாகச்சொல்லுகிறேனென்றுய்க்கேளு, மானேதான்மாயமென்றபூனையொன்று-மைந்தனேபானைவயென்றகிரியொன்று, தேனேதானிரட்டவாலரணையொன்று-தெளிவானதிகைப்பூடுபூச்சிப்பத்து, கோனேதான்பேய்பீர்க்கின்விதைதானப்பா-குணமாகவொண்டுபலநிறுத்துப்போடே. (௬௨)

போடேபுல்லாமணக்குவிதைதானப்பா -பொங்கமுடனிரண்டுபல நிறுத்துப்போடு, ஆடவேயிவையெல்லாநறுக்கியப்பா - அடைவானபேய்க்கருப்பஞ்சாற்றிற்போடு, நாடவேஜாமமதுகடந்துவாங்கி - நலமாகதிலந்தனிலேயுலரப்போடு, கூடவே யாதளையின்பாலைவாங்கி - குணமாகவொருசாமமூறப்போடே. (௬௩)

போட்டப்பாஇதுவெல்லாம்பாண்டத்திட்டுப் - பொங்கமுடன்பூத்தயிலமாகவாங்கி, தேட்டமாயைங்கோலத்தயிலநேரோ - தெளிவாகச்சேர்த்துநீயரைப்பாயபபா, தாட்டியாயரைக்கையிலே ரசமும்வெண்ணெய் - சார்வாகவகைவகைக்குக்கழஞ்சுபோடு, வாட்டமிலாமுபபூவுங்கழஞ்சுபோடு - வளமாக வரைத்தெடுத்துசிமிழில்வையே. (௬௪)

வையப்பாஜாலாக்காள் பூசைசெய்து - வளமானநீலகண்டி தியானமோது, கையப்பாஸ்ரீம்ஹ்ரீம் கிலீயும்சவ்வும் - கனிந்தஐயும்அவ்வுமுவ்வு மவ்வுங்கூட்டி. ஐயமின்றிரவ்வுடனே கூகூவென்றே-யடைவானநீலகண்டியம்மாவென்று, பையவேலட்சமுருசெபித்தாயானால்-பாங்கானமையதுவுமுயிராதச்சே, (௬௫)

ஆச்சப்பாநீலகண்டி பூசைசெய்து-அடைவாகமையெடுத் தாடக்கேளு, பாச்சப்பாநூலேணி யொன்றுசெய்து - பாங்காகமேற்

போடப் படியாய்நிற்கும், விச்சப்பாமையெடுத்துக் கையில்தேய்த்து - விதமாகமண்ணையள்ளித் திசையிற்போடு, கூச்சப்பாவெகுபடைகள் வருகுதென்று-கூறுவாய்வெகுபடைகள் வருகும்பாரே. ()

பாரடிநீலகண்டியம்மா நீயும் - பாங்காகநூலேணி பிடித்துக்கொள்ளு, சேரடியென்றுநூலேணிதன்னைச் - செயலாகச் சொல்லிநீபோடுபோடு, நீரடியந்தாத்திற்சண்டையாகத் - தெளிவாகச்செய்யென்றுதியானமோது, கூரடிபகையெல்லாம்போகுதென்று - குணமாகத்தானுரைக்கப்போகும்பாரே, (௬௭)

பாரடா நூலேணிமேலேயப்பா பாங்காகவெகுபடைகள்போகும்பாரு, சீரடாவெல்லார்க்குங்கண்ணிற்காணுஞ்-சிறப்பாகயாவருமேபுதுமையென்பார், கூரடாமையெடுத்துத் திலகமிட்டுக் - குணமாகநீலகண்டிதியானமோது, ஆரடா அந்தாத்திற்சண்டையாக - அடைவாகநீநினைத்துகுலவச்செய்யே. (௬௮)

செய்யுமேவானத்தில் முழக்கமெத்த - செயலாகவான்பரிகள் கனைக்கும்பாரு, கையிலேவாளுடனே தண்டைவாங்கிக் - கனிவாகமைபூசி வெட்டும்போது, ஐயமின்றிப்பொடிபொடியாய் வெட்டிவீசு-ஆள்தலைகள்வருகுதென்பா ரறிந்துபாரு, மையிலேகூழ்ப்பாண்டந் தடவிவெட்ட-மகத்தான ஆனையுட தலையென்பாரே. (௬௯)

பாரடாபூசினிக்காய் பூசிவெட்டப்-பாங்கானகுதிரையுட தலையென்பார்கள், காரடாகெச்சக்காய் தன்னிற்பூசிக் - கடிதாகத்தான் வெட்டச்சொல்லக்கேளு, ஆரடாகோடிபடை யிறந்ததென்பார்-அப்பனேயிந்திரசர லந்தான்சாலம், நேரடா தலைகளெல்லா மெடுத்துமூடு-நிச்சயமாய்ப்படைகளெலாம் போவென்பாயே. (௭௰)

மயேந்திரஜாலம்.

என்பாயேயிதுகளெலா மறைந்துபோகு - மெழில்நீலகண்டிநூலேணியீவாள், தென்பாகத்திலகத்தை வழித்துப்போடு-தெளிவாகவின்னமொருவித்தைகேளு, வன்பானஜாலக்காள்தியானமோதி - வளமானமையெடுத்துக் கையிற்பூசி, அன்பாகமண்ணள்ளித் திசையிற்போடு-அடைவாகமலைமலையாய்த் தோற்றும்பாரே. (௭௧)

பாரடா அஷ்டகுல பர்வதங்கள் - பாங்கானமகமேரு கயிலையப்பா, சீரடாபொதிகைமுதல் மலைகள்தோற்றுஞ்-சிறப்பாகவதிலிருக்குந் தேவர்சித்தர், நேரடாமுத்தரோடு முனிவர்தாமும் - நெடியவிருட்சங்கள்குகை வாசல்தானும், கூரடாவிதுகளெலாங் கண்ணிற்றோன்றுங்-குணமானபோகருட கடாட்சந்தானே. (௭௨)

சமுத்திரசாலம்.

தானென்றமயேந்திரத்தின் சாலமாச்சு-தயவாகச்சாகரத்தின் சாலங்கேளு, வானென்றமையெடுத்துக் கையிற்பூசி- வளமாகமண்ணள்ளித் திசையிற்போடு, கோனென்றசத்தசா கரமோரோழுங்-குணமாகமுன்காண வருகும்பாரு, தேனென்றதிவாந்தர மெல்லாந்தோற்றும்-திருமாலும்லட்சுமியுந் தோற்றும்பாரே. (௭௩)

பாரடாகப்பலொடு படருதோணி - பலமச்சம்நீர்வாழுஞ் சாதியெல்லாம்,நேரடாசெகத்தோர்களெல்லாம்பார்த்து-நிச்சயமாயிவனல்லோ தேவனென்பார், ஆரடாசாகரத்தின் சாலஞ்சாலம் - அன்பானசாலக்காள் வித்தையப்பா, தீரடாபோகருடகடாட்சத்தாலே-திறமானபுலிப்பாணி பாடினேனே. (௭௪)

சங்கிலிஜாலம்.

பாடியேயின்னமொரு வித்தைசொல்வேன்-பாங்காகமையெடுத்துக் கையிற்பூசி, ஆடி நூல்கயிறுசங் கிலிதானப்பா-அரியவெட்டிப்பாரை மந்திரவாளும், கூடியேவாய்மேலே கையைவைத்துக்-குணமாகப்பின்னிழுத்துக் கிழேபோடு, நாடியேயனைவோரும் பார்த்துப்பார்த்து-நலமாகவிழுங்கிவிட்டானென்பர்தானே. (௭௫)

பட்டணஜாலம்.

தானான இன்னமொரு வித்தைகேளு- தங்கிராக்காலமூர் வெளியிற்சென்று, மானானவோரிடத்தி லிருந்துக்கொண்டு-மைந்தனேமையெடுத்துக் கையிற்பூசி, வானானமண்ணள்ளித் திசையிற்போடு-வளமானபட்டணமாய்த் தோற்றும்பாரு,தேனானதெருக்களோடு தெருவுந்தோன்றும்-திறமாகக்கடைவீதி தோன்றும்பாரே. (௭௬)

பாரடாமனுக்கூட்ட மனந்தந்தோற்றும் - பருத்தகோபுரங்கோவில் குளமுந்தோற்றும், சீரானவேதியர்கள் வீதிதோற்றுஞ்-சிறப்பானராஜமனு சமுகந்தோற்றும், கூரடாசதுரங்க சேனைதோற்றுங்-குணமானசெந்நெல்முதல்தோப்புந்தோற்றும், வீரடாபோகருடகடாட்சத்தாலே-விதமாகப்புலிப்பாணி பாடினேனே. (௭௭)

பிசாசஜாலம்.

பாடினேனின்னமொரு தொழிலைக்கேளு-பண்பானகொடிதனிலைங் கோலஞ்சேர்த்து, நாடியேசாம்பிராணி தயிலங்கூட்டி-நமசிவயஓம்கிலீம் சவ்வும்ஐயும், கூடியேசர்வபசா சாக்ருஷணியென்று-குணமாகலட்சமுரு செபித்துத்திரு, ஆடியேயிதைசபித்துத் தூபம்போட-ஆடுவார்புகைபட்ட ஜெனங்கள்தானே. (௭௮)

குறளிஜாலம்.

தானென்றகுறளியுடதியானங்கேளு - தயவாகஓம் அவ்வும்உவ்வுமவ்வுங், தேனென்றஸ்ரீமுடனேஇதீமுங்கூட்டித் - தெளிவானகி

விமுடனேவயநமசியென்று, கோனென்றகுறளிவாவாவா நீயுங்-கு ணமாகச்சொன்னதெல்லாஞ்செய்வாயென்று,வானென்றஇந்திரஜா லமையப்பா-வகையாகத்தானெடுத்துசொல்லக்கேளே. (எகூ)

கோகர்ணஜாலம்.

கேளப்பாகுறளியைத்தான்லட்சமோதிக்-கெணிதமாய்ப்பலி பூசைநடத்தியப்பா, சூளப்பாமையெடுத்துவிரலிற்றெட்டுக்-சுக மாகக்குறளியைத்தான்தியானமோதி, வாளப்பாமேலெங்குந்தொ ட்டாயானுல்-வகையாகத்தொட்டிடங்கள்சுழிக்கவென்று, ஆளப்பா செய்யென்றுநினைத்துக்கொண்டு - அப்பனேதொட்டவிடஞ்சுழி க்கும்பாரோ. (அ0)

கஜகரணஜாலம்.

பாவொன்றகோகர்ணமிதுதானப்பா - பண்பானகெஜகர்ணஞ் சொல்லக்கேளு, சேவொன்றமையெடுத்துவிரலிற்றெட்டு-செம்மை யாய்க்குறளியுடதியானஞ்செய்து, வேவொன்றஇருகாதுந்தொட்ட போது - விதமானவிருகாதுமாடும்பாரு, தானென்றகஜகரணமிது தானப்பா-தயவானபோகருடகடாட்சந்தானே. (அக)

காளிவசியம்.

தானய்யாகாளியுடன்தியானங்கேளு- தயவானஅரிகாளியரகா சகாளி, ஊனய்யாஓடிகாளிவீரகாளி-உத்பனமாஞ்சூலகபாலகாளி, மூனய்யாமோடிதேவிபூமிகாளி - முதன்மையாமோங்காளியோம் பிடாரி, வானய்யாவாகாளிபோடிகாளி - வளமானபத்திரமாகாளி யெண்ணே. (அஉ)

எண்ணவேஓம்ஆம்கோதண்டரூபி - எளிதானயாளிவாகனத்தி லேறி, வெண்ணவேயரசரொடுசபைகள்மெச்ச -விருதலகைகொடி யுடன்வேதாளஞ்சூழ, அண்ணவேயாங்காரசத்திகொண்டு - அடை வாகவாவென்றுலட்சமோதிப், பண்ணவேபூசையதுவெள்ளிதோறு ம்-பாங்காகச்செய்தக்கால்சித்தியாமே. (அ௩)

செப்பிடுவித்தை.

சித்தியாம்வித்தையொன்றுசொல்லக்கேளு -செப்பஞ்சுபந்த ஞ்சுகோல்தானென்று, வெற்றியாய்சபைதனிலேயிருந்துக்கொண் டு - விளையாடுங்காளியுடதியானமோது, பத்தியாய்ச்சாலமைக்கோ லிற்றேய்த்துப் - பண்பானசெப்பஞ்சுமூடிப்பாரு, சத்தியாயஞ்சு மந்தும்லட்சம்பந்தாய்-சார்வாகஆடுமடாதாழ்வில்லாதே. (அச)

எட்டிமுளைவித்தை.

இல்லப்பாஅறுபத்துநாலுமோடி- இதமாகவாமேடாவிந்தக்கா ளி, வல்லபமாயின்னமொருவித்தைகேளு - வளமானமாக்கொடியு

ஞ்சீலைசேர்த்து, கொல்லவேசவத்தினுடதயிலங்கூட்டிக் - குணமா
னஐங்கோலத்தயிலஞ்சேரு, செல்லவேமூன்றையுங் கருக்கிக்கொ
ண்டு-செம்மையாயம்மியிலேயரைத்திடாயே. (௮௫)

அரைத்தெடுத்துச்சிமிழதனில்வைத்துக்கொண்டு - அடைவாக
மந்திரத்தைச்சொல்லக்கேளு, திரையநமயங்வங்சிங்சுவாகாவென்று
திறமாகலட்சமுருசெபித்துப்போடு, கருத்தடவிவெட்டிமுளைதன்
னைச்சீவிக் - கனிவாகமந்திரமாயிரந்தானோதி, நிரைத்தமகாபூசைப
லிபெலக்கச்செய்து நினைவாகமுளையெடுத்துக்கடாவுவாயே (௮௬)

கடாவுவாய்கடைமுன்னேகடைதில்லாது -கனிவாகச்செக்கடி
யிலெண்ணெய்யில்லை, அடாவுவாயலையடிசாறுமில்லை-யப்பனேவ
ஸ்தடுப்புமூன்றுதாகக், கிடாவவேவஸ்துவதுமிறங்காதப்பா - இரு
பையுள்ளசூளையதுவேகாதப்பா, நடாவியேகொல்லுலைசுண்ணம்
புச்சூளை-நலமானசெங்கல்லின்சூளைதானே. (௮௭)

தானேதான்மயானமுன்புபிணம்வேகாது-தயவானமக்கமடி
நிசைவுமில்லை,தேனேதான்தச்சனுடுகன்றன்தட்டான்-தெளிவா
கப்பட்டடைமுன்தாக்கிப்போடு, மானேதான்பரிகாரிசிரைக்கும்
பக்கல் - மைந்தனேயடுப்படியில்வேகாதொன்றும், வானேதானி
துகளெல்லாந்தம்பஞ்செய்யும் - வளமானபோகருட கடாட்சந்
தானே. (௮௮)

தானென்றவெள்ளாவி முன்னேதாக்கத் - தயவாகவெள்ளா
விவேகாதப்பா,சோனென்றநெற்களத்தில்ராசிகுன்றும் - குணமா
னஉப்பதுவும்விளையும்பக்கம்,தேனென்றராசியதுகுறையும்பாரு-
தெளிவானமீன்கரையில்மீன்கிட்டாது, ஆனென்றகோட்டணத்தில்
நெற்களெல்லாம்-அப்பனேமசியாதுகண்டுபாரோ. (௮௯)

பாரடாநாவிதனைச்சுட்டகோலும் - பண்பானமுளைசெதுக்கி
உகாரம்நாட்டி, சீரடாஐங்காயக்கருவும்பூசிச்-சிறப்பானவெதிரிமலை
ந் தன்னில்தாக்க,வீரடாமுன்பின்னுமடைக்கும்பாரு-விதமாகமார
ணமாய்போவானையா, கூரடாமுளைபிடுங்கிநீரிற்போடக்குணமாகு
மடித்ததெல்லாம்நிவிர்த்திதானே. (௯௰)

சண்டைஜாலம்.

தானென்றஞஞ்சடியில் காக்கையென்ற - தயவானமூலிகை
யொன்றென்னசொல்வேன்,ஊனென்றவிலங்கையிலேகுரங்குமூ
லி-யுத்தமனேமலைதோறும்உண்டுஉண்டு, வானென்றவிருமூலிவே
ணமட்டும், வகையாகப்பிடுங்கிவந்துசொல்லக்கேளு, ஆனென்றஞ
ஞ்சடியில்காக்கைமூலி-அப்பனேயொருசாக்கில்கடைமேல்வையே

வையடாஇலங்கையினிற்குராங்கையப்பா - வளமாக ஒருசரக்கில்வைத்துப்போடு,பையவேயாருக்குங்காணுவிட்டால்-பண்பாகவிரும்பிலேபதித்துப்போடு, ஐயோதானிதன்கொடுமை சொல்லப்போமோ - அப்பனேயிருகடைபோரடித்துக்கொள்வார்,கையவேதம்பியென்றுகூப்பிட்டாலும் - கடுகிவைதானென்றே கண்டிப்பாரே. (கூஉ)

மாடன்மந்திரம்.

பாரடாநஞ்சுகண்டுமரித்துப்போன- பரிவானமனிதனைத்தான்தகனம்பண்ணிச்,சீராகக்காடாற்றுமுன்னேதானுஞ்-சிறப்பாகக்கரியதிலேயெடுத்துக்கொண்டு, வீரானஐங்கோலக்கருவைத்தொட்டுவிதமாகவாண்போலேமாடன்கீறித்,தீராசமுகமதுதான்கதித்ததாகத்-திறமாகச்சுவரதனிலெழுதிப்போடே. (கூங)

போடப்பாதிரிபோதின்கீழ்நாட்டிப் - பொங்கமுடனுகாசமாடனென்று,கூடப்பாவெட்சமுருஜெபித்துப்போடு - குணமானமந்திரந்தான் சொல்லக்கேளு, நாடப்பாஓம்நமோபகவதேஓம்-நலமாகஓம்படுசுவாகாவென்று - ஆடப்பாபூசைபலி பலக்கச்செய்துஅடைவாகமந்திரந்தானேநக்கேளே. (கூச)

கேளடாகாரியத்தகட்டிலப்பா - கெணிதமாய்மந்திரத்தையெழுதிப்போடு, சூளடாவெதிரியுடபேனாநாட்டுச்-சுகமான ஐங்காயமைங்கோலஞ்சேர்த்து,ஆளடாசுடலையுடகருவுங்கூட்டி- அப்பனேமந்தித்துத்தகட்டிற்பூசி, வாளடாபூசைபலிபலக்கச்செய்து-வளமானமாடனைத்தான்தியானமோதே. (கூரு)

ஓதியேமாடனைத்தான்தகட்டிற்கெல்லு- ஒளிவானவர்காசமாடாநீயும்,வாதிபாய்க்கல்லிந்தாவென்று-வகையாகச்சொல்லியபின்கல்லுதானும்,ஆதியாந்தகட்டின்மேல்வைத்தாயானால் - அப்பனேகல்லதுவுமளவிராது,பாதிபேயொருகோடிபூதமெல்லாம் - பார்த்திருக்கத்தானெறியுங்கல்லுதானே. (கூசா)

தானேதான்மண்ணெடுத்துச்சாலைக்கற்கள்- தயவாசமாட்டெலும்புசெங்கல்மூட்டை,மானேதானவபாண்டமரிசியுப்பு-வளமானமிளகுபொடிதிட்டுச்சீலை,வானேதான்குப்பைபொடு கண்டதெல்லாம்-வாரியேதானெறியுமின்னந்தன்னில்,கோனேதானெதிரிபோயிடங்களெல்லாங்-கொற்றவனேயவனருகேபோகும்பாரே. (கூஎ)

பாரடாசத்துருவும்வணங்கிவந்தால்- பண்பானமாடனைநீயழித்துப்போட்டு, வீரடாமாடாநீகல்லைத்தானும்- விதமாகத்தாவென்றேயெடுத்துப்போடு - சீரடாசாணமிட்டு மெழுகிப்போடு, இர

மாகச்சக்கரத்தைக்கழுவிநீயும், கூரடாசலந்தனிலே விட்டுப்போடு-
குணமாகமாடனைத்தான் பூசைசெய்யே. (௯௮)

கொள்ளிஜாலம்.

செய்யவேயின்னமொரு வித்தைக்கேளு-செயலானகொள்ளி
வாய்ச் சாலமப்பா, பையவேசிவயவசியென்றுலட்சம்-பாங்காகத்
தான்செபித்துப் பூசைசெய்து, உய்யவேயக்கினியைத் துணியிற்சு
ற்றி-யுத்தமனேதகட்டிலட் சரத்தைக்கீறிக், கையவேவையங்காயமை
ங்கோலந்தான்-கனிவாகச்சுடலையுட கருவும்பூசே. (௯௯)

பூசியேயெதிரியுட பேனாநாட்டிப்-பொங்கமுடன்பூசித்துக்
கொள்ளிவாய்க்கு, ஆசியேபந்தெடுத்துத் தகட்டில்வைத்தே-யப்ப
னேயிருதலைக்கொள்ளிதானும், வாசியேசத்துருவின் மனைகள்தோ
றும்-வைத்துநீகொளுத்தென்று தியானமோது, காசியேகொளுத்
துமடா திரியும்பந்து-கடிதாகக்கொளுத்திவிடுங் கண்டுபாரோ. (௱)

மலைக்குட்டி.

பாரடாமலைக்குட்டி தியானங்கேளு-பாங்கான ஓம் றீம்வா
வாவென்று, கூரடாமலைக்குட்டிச் சாத்தாவென்று-குணமாகநான்
வைத்த பூசைகொண்டு, வீரடாநான்சொல்லும்வேலைகேட்டு-வீணு
கமலமதனை வாரிநீயும், சோரடாநானினைத்த விடத்திற்போடு-செப்
பியிதுராஜபலி பலக்கச்செய்யே. (௱௧)

மலைக்குட்டிஜாலம்.

செய்யவேமந்திரத்தைத் தகட்டிற்கீறிச்-செம்மையாயைங்கா
ய மைங்கோலஞ்சேர்த்து, வையகத்திற்சுடலையுட கருவுங்கூட்டி-
வளமாகமத்தித்துத் தகட்டிற்பூசிப், பையவேயெதிரிபேர்தகட்டில்
நாட்டிப்-பாங்காகமந்திரத்தை லட்சமோது, ஐயமின்றிப்பூசைப
லிபலக்கச்செய்து-அப்பனேமலமெடுத்துத் தகட்டில்வையே. (௱௨)

வைக்கையிலேமலமிந்தா மலக்குட்டியென்று-வைத்தல்லோ
மந்திரத்தைத் தியானஞ்செய்நீ, தக்கையிலேமலமதனை வாரிக்கொ
ண்டு-அடைவாகநீநினைத்த விடங்கள்தோறும், சொக்கையிதகட்டெடு
த்துக் கழுவிப்போடு-சொகுசாகப்போகுமடாதீர்க்கமாக, உக்கை
யிலேயிதுவல்லோ வுலகபேதம்-உத்தமனேமலக்குட்டிச் செய்கை
தானே. (௱௩)

கவசமந்திரம்.

தானேதான்கவசமொன்றுசொல்லக்கேளு-தயவாகறீங்காரம்
வெள்ளிமுகட்டில், மானேதான்இம்உம்நம் நமாங்சிங்கென்று-மை
ந்தனே யாயிடாகினிமாங்காளி, ஊனேதான்விஷ்ணுசகோதரிசர்

வாணி-புமைதேவிபராசத்தி கவசியென்று, சோனேதான்லட்சமுருசெபித்துப்போடு-கொற்றவனேசத்திசிவ பூசைசெய்யே. (௩௪)

செய்படாதியானமிட்டுவிபூதிபூசிச்-செகதலத்திலேவல்முதற்பசாசுபூதம், பையவேபுதைபில்லி வேர்பிடுங்கிப்-பகர்ந்தகருத்தடவிச்சக் கரங்கல்வாட்டல், நையவேபார்வையுடன் குறளிசூட்டி - நலமாகமற்றுள்ள சூனியங்கள், கையவேகல்லெறிச்குந்திக்குமப்பா-கனிவாகமந்திரத்தை யெழுதிக்கட்டே. (௩௫)

ஒண்டி மூலிகை.

கட்டப்பாமூலியொன்று சொல்லக்கேளு-கனிவாகவொண்டிவுட்மூலிக்கேதான், கிட்டப்பா அமாவாசைக்கிராணகாலங்-கிருபையுள்ள அருக்கனுளேதோன்றப்பா, நெட்டப்பா பொங்கல்பலிபூசைசெய்து-நேராகவேயொடுத்துக் கட்டிக்கொண்டால், பட்டப்பாபார்வைமுதலெதுவானாலும்-பக்கத்திலணுகாம லகன்றுபோமே. (௩௬)

பார்வை - மை.

போமப்பா ஆமையொன்று மணத்தவளையொன்று-பொங்குமுடன்கோழியுட முட்டையொன்று, தாமப்பாபுதைத்தெலும்புபலந்தான்றெண்டு-தயவானஈசலது பலந்தான்றெண்டு, நாமப்பா நிலாவாளை விதைதானப்பா-நாயகனேபலமிரண்டு நிறுத்துப்போடு, ஆமப்பாமரக்கொடிதான் விராசன்மூன்று-அடைவாகப்பூத்தயில மாகவாங்கே. (௩௭)

வாங்கியேதயிலத்தையெடுத்துக்கொண்டு - வளமானகுழியம்மிதன்னிற்போடு,தாங்கியேயஞ்சனக்கல்வராகனொன்று-தான்போட்டுஆள்சாட்டிமூட்டைநெய்யில், பாங்கியேகொஞ்சமதுகூடவிட்டுப்- பரிவாகவொருசாமந்தானரைத்துக், காங்கியேசிமிழில்வைத்தனுமாருக்குங்-கனிவாக அஞ்சனிக்கும்பூசைசெய்யே. (௩௮)

செய்யப்பாமையெடுத்துப்பார்க்கும்போது-செயலானகளவுமுதலேவலப்பா, வையப்பாதொழில்முறையுந்தெய்வபூதம் - வளமானபசாசுராட்சதகணங்கள், பையப்பாமோடிதானொருவன்செய்தால் - பாங்காகவவன்செய்கைதோற்றலாகும், கையப்பாஇதுபார்வைமைதானப்பா-கனிவாகச்சொல்லுமடாகருத்தாய்தானே. (௩௯)

வாணமடக்க.

தானேதானின்னமொன்றுசொல்லக்கேளு-தயவாக அனையடக்க அங்கமடக்க,மானேதானங்கமேற்பங்கமடக்கமைந்தனேவழியடக்கச்சுபாகாவொன்று, கோனேதான்தண்ணிமுட்டான்கிழங்குக்கப்பா - கொற்றவனேயருக்கனுள்காப்புக்கட்டி, வானேதான்பொங்கல்பலிபூசையிட்டு - வளமானமந்திரமாயிரந்தானுதே. (௪௰)

ஓதியேபிடிக்கிமுன்கருவைப்பூசி - ஓகோகோகாலடியில்மிதி
த்துக்கொள்ளு, சோதியேவாணமதுஎதிரோறுது-சுறுக்கானமந்திர
த்தையோதிநில்லு, ஆதியேவாணமதுவெடிக்கும்பாரு- அந்தரத்தி
ற்செல்லாதுஅதிதவித்தை, வாதியேபோகருடகடாட்சத்தாலே - வ
ளமானபுலிப்பாணிபாடினேனே. (௩௰௧)

பாதாளஅஞ்சனம்.

பாடினேனுசியென்றகாந்தம்நீலம் - புண்பானஆமைமணகயில்
மஞ்சளப்பா, ஆடியேவேசிகைவெற்றிலையுங்கூட- அடைவானசெ
ங்கழுநீர்வேருமையா, நாடியேதலைமஞ்சள்மாவுங்கூட்டி- நலமான
கோரோசனைகுங்குமப்பூ, கூடியேவகைவகைக்குவிராகனென்று-
குழியம்மிதனிலரைக்கவகைகளைக்கேளே. (௩௰௨)

கேளடாமாடமென்றபுறாவின்ரத்தம் - கெணிதமாயொன்றறு
த்துக்கூடவாரு, குளடாசெவந்தபசுவெண்ணெய்யப்பா-சுகமாகவி
ராகனதுபனிரண்டாகும், நாளடாமூன்றுநாளைத்தெடுத்து - நாயக
னேசிமிழில்வைத்துக்காளிமுன்பில், வாளடாபுசைத்தெடுப்பாய்நா
ளெட்டாகும்-வளமானபுழுகுடன்சவ்வாதுசேரே. (௩௰௩)

சேரப்பாவகைவகைக்குவிராகனென்று- சீராகமத்தித்துமந்தி
ரந்தான், பாரப்பாசர்வலோகவசிகரிஓமென்று-பண்பாகஆயிரத்தெ
ட்டுருஜெபித்து, நேரப்பாதிலகமிடுபுருஷர்பெண்கள்-நிச்சயமாய்
க்கேட்டதெலாமீவாரப்பா, கூரப்பாபகைகளெலாநசித்துப்போகு
ம்-குற்றமொன்றுமில்லையடாஜெகத்தில்தானே. (௩௰௪)

தானப்பாவேர்வடித்தபலவின்கொட்டை - தான்கரிக்கிவிராக
னிடைபத்ததாகும், வானப்பாஅஞ்சனபாஷாணமொன்று - தெளி
வாகக்குழியம்மிதன்னிற்போட்டு, வானப்பாவிளக்கெண்ணெய்த
ண்ணிலாட்டு- வளமாகவொருசாமமரைத்தபின்பு, கோனப்பாசிமி
ழில்வைத்தஞ்சனிக்கும்-குணமானவனுமார்க்கும்பூசைசெய்யே. ()

செய்தபின்புகையிலிட்டெவரும்பார்க்கச் - செகத்திலுள்ளநி
திகளெலாங்கண்ணிற்காணும், எய்தபின்புவேண்டியதையெடுத்து
க்கொள்ளு - இதமாகவிகபரத்துக்குறுதியாகும், உய்தபின்புநாழி
கைதான்பாதாளத்தி - லுத்தமனேநிகளமுந்நூறுகாதம், பைதபின்
புஇம்மைதானுறுதிமெத்தப் - பார்த்தவர்க்குப்பலனுண்டு பலிக்கு
ம்பாரோ. (௩௰௬)

குறிசொல்ல.

பாரடாஆடையொட்டிசமூலமப்பா - பண்பானதின்றிடந்தி
ஞ்சமூலி, சோடாகருச்சிலையிந்தமூன்றுஞ் - செம்மையாய்க்கருக்
கியல்லோமைபோலாட்டு, சீரடாசுடலையென்றதயிலஞ்சேர்த்துச்-

செவ்விதாயனைத்துநீசிமிழில்வைத்து, வீரடாஅனுமானத்தியான ஞ்செய்து-விதமாகத்திலகமிட்டுக்குறிதான்சொல்லே. (ரயஎ)

சொல்லப்பா அஞ்சனைதேவிபுத்திரா-சொகுசானவாய்வுமைந் தா புருஷிரூபா, வல்லவா அனுமந்தா ராமதூதா-வந்தகுறிசொல்லெ ன்று வணங்கிக்கேளு, இல்லப்பானினைத்ததெல்லாஞ் சொல்வான் பாரு - என்னசொல்வேணனுமனுட் குறிதான்மைந்தா, நல்லப்பா போகருட கடாட்சத்தாலே-நலமாகப்புலிப்பாணி பாடினேனே.()

இடுமுறை.

பாடியேயின்றொன்று சொல்லக்கேளு- பண்பான அடைக்கலா ங் குருவியாண்தான், ஆடியேபிடித்துவந்த பானந்தைத்து-அதின் வாயிலூசியென்றசாந்தம்வெள்ளை,கூடியேவாயைநீதைத்துபோகு ங்-குணமாலசிறுபாண்ட மதிலேவிட்டு, நாடியேவஸ்துஒருபடிதா ன்வார்த்து-நலமாகவாய்மூடிச் சீலேசெய்யே. (ரயகூ)

செப்தபின்படுப்பேற்றித் தீயைமூட்டிச்-சிறப்பாகவொருசா தி விறகினாலே, வைதுநீர்வற்றியபின் பெடுத்துக்கொண்டு-வளயா ன்குழியம்பி தன்னிற்போட்டு, கொய்தபின்புரோமமுட னஸ்தித ள்ளிக்-குலவுமரக்கொடியுமருளுமத்தைவித்தும், பைதபின்புகுழல் வண்டு மின்னற்பூச்சிப்-பருத்தகுழியானையிந்திரகோபந்தானே. ()

தானென்றதெரட்டக்கால் வாடிவேரும்-தயவானநாயுருவிகை யான்வேரும், தேனென்றதிகைப்பூடு பூச்சியப்பா-திரமாகவகைவ கைக்கு வராகனொன்று, கோனென்றஈப்புலி யுமியுங்கூடச்-சொற் றவனையாடையொட்டியை விரவிக்கஞ்சா, வானென்றபேய்க்கரு ப்பஞ் சாற்றினாலே-வகைவகைக்குச்சரியிடையாய் விட்டுஆட்டே.

ஆட்டப்பாகுளிகைபது துவரைபோலே-அப்பனேசெய்துநீ ழலிலுலர்த்தி, நாட்டப்பாமந்திரந்தான் சொல்லக்கேளு-நமோஓ ங்இங்சிங்சிங் சுவாகாவென்று, மாட்டப்பாவிந்துவிட்டுக்குழைத்து நீயும்-மங்கையருக்கறுசுவையில் தாம்பூலத்தில், கூட்டப்பாமங்கை யர்கள் விரகமீறிக்-கொம்பனையார்தாமணைய வருவார்பாரோ.(ரஉஉ)

பிறிவு.

பாரடாபிறிவு குளிகையொன்று-பாடுகிறேனென்றாகச்சொல்ல க்கேளு, வாரடாசெத்தாடு உண்ணியப்பா-வளமானவிடத்தலாம் ப ட்டைகூட்டி, நீரடாதண்ணீர்விட் டரைத்துமைபோல்- தினைவாகத் துவரைபோற்குளிகைசெய்து,கூடாகொடுத்தவுடன்முறிந்துபோ கும்-சொற்றவனையறுசுவையில் தாக்கிப்போடே, (ரஉங)

வசியம்.

போடவேயின்னமொன்றுசொல்லக்கேளு-புகன்றபொன்று வாளை மூலம்வாங்கி, ஆடவேகிருக்கியதை நிழலுலத்தி-யப்பனேகு ழித்தயில மாகவாங்கி, கூடவேகுழியம்மி தன்னில்விட்டுக் - குச்சி டத்தின்வெண்கருவுங் கூடவிட்டுச், சாடவேமரக்கொடியும்புழுகு பூரம்-தக்ககோரோசனையும் வகைக்குழன்றே. (௱உச)

ஒன்றானவகைவகைக்கு வராகனொன்று-ஒழுங்காகத்தானரைத் துச் சிமிழில்வைத்து, நன்றாகத்திலகமிடப் புருஷரெல்லாம் - நாய கியாள்கேட்டதெலாம் ஈவார்பாரு, ஒன்றாகவவர்வந்து வாசல்கா ப்பார்-உனக்கடிமையாகியல்லோ வேலைசெய்வார், பன்றாகவவனை யேகாணவிட்டால்-பதருவாள்சிணுங்குவாள் கோவிப்பாளே. ()

கோவிதமாயின்னமொரு மார்க்கங்கேளு-குணமாம்புல்லாம ணக்குச் சமூலம்வாங்கி, ஆவிதமாய்மாதவிடை மூன்றுநாளும்-அப் பனேகட்டிவைத்து நாலாநாளில், தாவிதமாய்மரக்கொடியும் வராக னொன்று-தனியாகமுன்சீலை வராகனொன்று, பூவிதமாயவணீரா லரைத்துமைபோல்-பொங்முடன் துவரைபோற் குளிகைசெய்யே. ()

செய்யப்பாகுளிகையதுதாம்பூலத்தில்-செயலானவறுசுவையி லன்னப்பாலில், வையப்பாகொடுத்தவுடன்மயங்குவார்கள்-வாணு தலார்தான்பிறியார்மறுமுகமும்பாரார், கையப்பாமகிழ்வாகமருவி வாழ்வார்-கடன்வாங்கித்தான்கொடுப்பாரேவலாளாய், ஐயனேயவர் பிறியச்சிந்தைசெய்யா- அப்பனேயினிபிரியுங்குளிகைமாட்டே. ()

மாட்டடாபெண்பிரிவும்பிறிவுக்கெல்லாம் - மைந்தனேகடு கோடியானச்சாம்பல்,கூட்டடாகுடிபோனவீட்டுமண்ணும் - கு ணமானவருக்கனுளிலவுவேலை,நாட்டடாகர்த்தபந்தான் புரண்டம ண்ணும்-நலமானதச்சனுளிச்சிராயுஞ்சுற்றி,ஆட்டடாமுப்பாதைபி றிந்தமண்ணும்- அப்பனேமந்திரத்தைச் சொல்லக்கேளே, (௱உஅ)

கேளடாஓம்ஸ்திரீயபிரியநசிநசியென்கெணுதமுடனிருவருட பேருமாறிச்,சூளடாவைங்காயமரைத்துப்பூசி - சுறுக்காகமந்திரமா யிரந்தானோதி,வாளடாசீலையிலே வைத்துக்கட்டி- வளமாகப்பூசை செய்திறப்பின்முன்பில்,கோளடாவைத்துவிடுஇருவர்தாமும்-கொ றீறவனேபிறிபட்டுப்போவார்பாரே. (௱உகூ)

தாதுபுஷ்டி.

பாரப்பாசத்தனமுந்தேற்றான்வித்தும் - பண்பானபூமிசக்க ரையின்மூலம், சேரப்பாபூளையென்ற காவிவித்துஞ்-செயலானமு ருங்கைவேர்ப்பட்டைகூட்டி, கூரப்பாவகைவகைக்குவிராகனொ ண்டு-கொற்றவனேதானரைத்துத்தேங்காய்ப்பாலில், தீரப்பூசீனி சர்க்கரையுந்தானும்-திறமாகக்குடிப்பாயிராறுநாளாமே. (௱௩௰)

ஆம்டாகுடித்துவரத்தாதுபுஷ்டி - யப்பனேவீரியந்தான் விளையும்பாரு,தாமடாசூடுகள்தான் தணியும்பாரு- தளதளப்பாய்தேகமதுகாந்தியுண்டாம், வாமடாபெண்களைத்தான் புணர்ந்தாயானால் - வளமானமன்மதனேனுமிவனென்பார்கள்,நாமடாபோகருட கடாட்சத்தாலே-நலமாகப்புலிப்பாணிபாடினேனே. (௩௩௧)

வஸ்துயாண்டமுடைய.

பாடியேயின்னமொருவித்தைசேளு - பரிவானசாராயமூறும் பட்டை, நாடியேகொணர்ந்துசருச் சிலைசுத்தி- நாயகனேகாவி கோட்டமுன்பில்வைக்க,ஆடியேபானையெல்லாமுடையும்பாரு -அடைவாகவிறங்காதுகெட்டுப்போகும், கூடியேயெடுத்தெறிந்து போட்டாயானால்-குணமாகப்பானையதுவிளையும்பாரே. (௩௩௨)

விளைவுகெட.

விளைவுகெடக்கொடிவேலிகாப்புக்கட்டி -விதமாகரம்மென்று லட்ச மாதி,களவாகக்கலசத்தில்வைத்துமூடிக் - கனிவாகக்கருக்கூட்டிக்காடுசெந்நெல், விளைவுபெறுங்கொடிக்காலுங்கன்னல்வாழை விதமானதென்னமரச்சோலைதோப்பும், அளவுபெறவைக்கிலெல்லாப் பலனுங்குன்றும் - அப்பனேயெடுத்தெறிந்தாற் பலனுண்டாமே. (௩௩௩)

விளைவுபெருக.

ஆம்டாநாயுருவிகாப்புக்கட்டி - அப்பனே ஸ்ரீமென்று லட்சமோதி,தாமடாகாடுசெந்நெல்கரும்புவாழை - தயவானகொடிக்காலுந்தென்னந்தோப்பும்,வாமடா ஐங்கோலக்கருவும்பூசி, வளமாகக் கலசத்திற்புதைத்தாயானால் - நாமடா இதுகளெலா மதிகமாகும்நலமானபோகருடகடாட்சந்தானே. (௩௩௪)

பூதபிசாசவினோதம்.

தானனசொரிதவளைபிடித்துவந்து-தயவாகச்சாம்பிராணிவேணமட்டும்,மானான அதின்வாயிற்செலுத்தித்தைத்து - மைந்தனேபுகையூரத்தலைகீழ்கட்டி, வானனமண்டலந்தான் கடந்துவாங்கி-வளமானசாம்பிராணியெடுத்துக்கொண்டு, ஆனதோர்தலைமஞ்சங்கொடியுங்கூட்டி-அடைவானசாம்பிராணிபுகையும்போட்டே, (௩௩௫)

போடப்பாபுகைபிடிக்கப்பசாசுபூதம் - பொங்கமுள்ளதேவரொடுமுனிகருப்பன், நாடப்பாபிரமராட்சதனுஞ்சாத்தான் - நலமானலாடன்சப்பாணியின்னும், கூடப்பாஒமென்றுபோட்டாயானால்-கொற்றவனேதலைவிரித்தாடும்பாரு, ஆடப்பாபேருருஞ்சொல்லுமையா-அப்பனேபுகையினுடபெருமைதானே. (௩௩௬)

பெருமையாயின்னமொருமார்க்கஞ்சேளு-பேணியேமனிதரஸ்திசமுதையஸ்தி, அருமையாய்க்கழுதையின்தண்டெச்சிலை - யப்ப

னேமனிதர்மலம்பண்ணிலத்தி, உரிமையாங்காக்கணய்வேர் சீத்தி
ல்மேனி - யுத்தமனேமுட்டைகொஞ்சஞ்சேர்த்திடித்துத், தெரி
வானபுகைபோடத்தேவர்யாருந் - திறமாகவாடுவர்காண்சீலையன்
றோதே. (௱௩௭)

வினோதஜாலம்.

ஓத்வேயின்னமொரு வித்தைகேளு - ஒளிவானசிதம்பரத்தின்
பூசைசொன்னோம், கோதிலுச்சாடனசக் கரத்தைக்கீறிக் - கொற்ற
வனேபிராமணரிற்பிரமசாரி, ஆதரவாயவன்மரித்துத் தகனமாகி-ய
ப்பனேகாடாற்று முன்னேதானும், வாதாக அஸ்தியொன்றெடுத்து
வந்து-வளமானவஸ்துவொரு மேருவாங்கே. (௱௩௮)

வாங்கியேசக்கரத்தை லட்சமோதி - வளமாகத்தான்புதைப்பா
ய் தேவர்பின்பில், பாங்கியேவஸ்துவுட னஸ்திதானும் - பாங்காகத்
தேவர்முன் புதைத்துப்போடு, தாங்கியேபலிபூசைசெய்தாலப்பா-
தயவாகத்திருநடன மாடும்பாரு, ஓங்கியேகேட்டவரங் கொடுக்கச்
செய்யும்-உத்தமனேசனங்கூட்ட மாகும்பாரே. (௱௩௯)

தேள்கடியிறங்க.

பாரடாஇன்னமொரு வித்தைகேளு- பாங்கானசெம்போத்து
நாக்குமைந்தா, சேரடாவுடும்புடைய நாக்குங்கூட்டிச்-செயலான
கீழ்க்காயின் மூலம்வாங்கிக், கூரடாரசமப்பா வாரகனொன்று-கொ
ற்றவனேயாண்கழற்சிக் காயினுள்ளே, திரடாகிராணமது தீண்டும்
போது-திறமாகவெடுத்துசொசு மெழுகில்மூடே. (௱௪௰)

மூடியேதேள்கடித்து வந்தபேர்க்கு-முன்னாகக்கழற்சியதை
க்கையில்தந்து, ஆடியேபின்னொருவர் கையிலீந்தால்-அப்பனேயி
வனைவிட் டவன்மேற்போகும், நாடியேதேளின்விஷமென்னம்சா
ல்வேன் - நடுநடுங்கியமுதிடுவா னெறியுங்கட்டும், கூடியேகாலைநீ
போடென்றாக்கால்-குணமாகப்போட்டவுட னிறங்கிப்போமே. ()

சீலைமெழுகுபாவை.

போமென்றகருநாயின் விலாவின்வில்லும்-பொங்கமுடனுக
த்தி னரம்புதானும், ஆமென்றசுடலையின் கருவுங்கூட்டி-யப்பனே
பைங்கோலத் தயிலஞ்சேர்த்து, நாமென்றநாணதிற் பூசியப்பா-நா
யகனேகழிப்பினுட தியானங்கேளு, தாமென்றஓங்ரீங்ரங் மங்சங்
ஐயும்-தயவாகதீம்ரங்லா லீஹ்வென்னே. (௱௪௨)

என்னவேமங்சிங்சிவயநமவென்று - என்னசொல்வேன்மந்த
ரத்தை லட்சமோதி, பன்னவேபூசைபலி பெலக்கச்செய்து - பாங்
கானவெதிரிபேர் தன்னைச்சொல்லி, நன்னவேநாணேற்ற வியாதி
கொண்டு-நடுநடுங்கிமரணமாய்ப் போவான்பாரு, அன்னவேகழிவி
னுட வீரமெத்த-ஆறியப்போகிறா ரருமைதானே. (௱௪௩)

தானென்றசிவன்காளிகணபதிகந்தன் - தயவானவயிரவனும் பெருமாளையன்,கோனென்றவனுமனெனுடுகேறுப்பனப்பா- கொற்றவனேயவர்கள்மெழுகெடுத்துக்கொண்டு, தேனென்றவகைவகைக் குவிராகமொன்று-தெளிவானமெழுகுபதினெண்விராகன், வானென்றஜுங்கோலமைங்காயஞ்சேர்த்து - வளமானசுடலையுடகருவுங்கூட்டே. (௪௪௪)

கூட்டியேலேகித்துஉருப்போற்செய்து-கொற்றவனே மயானருத்ரன்தியானமோது, நாட்டியேமம்யம்யம்டம்டம்மென்றுநலமானமயானருத்ராசட்டுகட்டு. குட்டியேயெரியெரியென்றுலட்சஞ்சுகமாகத்தாஞேதிப்பூசைசெய்து, ஆட்டியேசத்துருப்பேரெழுதிவைத்து-அப்பனேயுருவயிற்றிறப்பித்துப்போடே. (௪௪௫)

பதித்துநீயாயிரத்தெட்டுருஜெபித்துப் - பண்பானபூசையது பாங்காய்ச்செய்து, அதித்துநீமுப்பத்திரண்டுறுப்பில் - அப்பனே முடக்கிவைக்கமுடமதாவான்,கதித்தவுடனூசியிலேகுத்தும்போது கனிவானவிரல்நகங்கள்காதில்குத்தும், நதித்தவுடனூசியது செருகி வைக்க-நாயகனேகுத்தலெடுத்தலறுவானே. (௪௪௬)

அலறியேயவன்வணங்கிவந்தானானால்-அப்பனேமுடந்திருப்பிபூசிவாங்கு,நலமாகவயிற்றில்வைத்தசிட்டும்போக்கு-நாயகனேதிவிர்த்தியாய்ப்போகும்பாரு,குலமானபாவையைநீபதனம்பண்ணு-சொற்றவனே நினைத்தபோடெடுத்துச்செய்நீ, பலமாகஇப்பாவைகையில்வேணும்-பார்த்தவர்க்குப்பலனுண்டுபலிதமாமே. (௪௪௭)

ஆமப்பாஐயுங்கிலீம் சுவாகாவென்று - அடைவாசலட்சமுருஜெபித்துத்தீரு, நாமப்பாபூசையப்பா சத்திபூசை - நாள்தோறுமண்டலந்தான் தினமுஞ்செய்நீ, வாமப்பாமண்டலத்திற் சித்தியாகும்-வளமாகவேணுமென்றதெதுவானாலும், போமப்பாநீசொல்லித் தியானஞ்செய்யப்-போகுமேயவரிடத்திற் கனவில்தானே. ( )

கனவிலேபேய்போற்பெண் போற்போய்சொல்லும்-கனிவாகஇன்னுனை யழைத்துநீதான், வினவியேயின்னதெலாங் கொடுத்துநீயு-மீறுதேயவன்சொல்லை யெதுசொன்னாலும், பனுவலாற்றேவியுட வருள்தான்பெற்றேன், பண்புள்ளோனல்லகுண னென்றுகூறும், அனுவியேசொற்பனந்தான் வராகியாலே-யப்பனேஜெகமுழுதும் வணங்கும்பாரே. (௪௪௯)

பாரடாபேய்நரிநாய் குடித்தபோது-பாவமில்லையதின்சோற்றை யொன்றில்வாங்கிச், சோடாவரிசிபதி னுலரப்போட்டுச்-சேர்த்தப்பாசுடலையுட கருவுங்கூட்டிக், கூரடாதிழலதனி னுலரவைத்துக்-செடிதாகவரிசிகொஞ்ச மறுசுவையிலன்னம், வீரடாசத்துருவுக் கிட்டபோது-விதமானபிரமைகொண் டலைவான்பாரே. (௪௫௰)

பாரப்பாமிளகுதக் காளிச்சாறு-பண்பாசமூன்றுநா ளாறுவேளை-கூரப்பாகொடுத்திடவே தீருட்பாரு - குணமாகநிவிர்த்தியாய்ப் போகுங்கண்டாய், சீரப்பாபத்தியந்தா னுப்பாகாது - சிறப்பான வேழுநா ளெல்லாங்கூட்டு, வீரப்பாபோகருடகடாட்சத்தாலே-விதமானபுலிப்பாணி பாடினேனே. (௱௫௧)

மோடிவித்தை.

பாடினேனின்னமொரு மோடிவித்தை - பண்பானநடனசிதம் பாத்தைக்கீறி, ஆடினேனட்சரமும் பீஜமெல்லாம்-அடைவாகத் தானடைத் தருளையோதிக், கூடவேஓம்ஸ்ரீயும் ஐயுங்கிலியும்-குணமானஅவ்வுமுவ்வு மவ்வுஞ்சிவ்வும், நாடியேநமசிவய சுவாகாவென்று-நலமாகலட்சமுரு ஜெபந்தானோதே. (௱௫௨)

ஓதியேசக்கரத்தை வைத்துக்கொண்டு-உத்தமனேசோடசமாம் பூசைசெய்து, சோதியேசக்காத்தை வைத்துக்கொண்டு - சுகமானமோடிவைக்கச் சொல்லக்கேளு, ஆதியேகோயில்முன்பு குளத்தின்முன்பு - அப்பனேயம்பலங்கள் தெருவிலப்பா, நீதிலாபோகருட கடாட்சத்தாலே-இடமாகக்கும்பம்வைக்கும் நீதிகேளே. ()

நீதியாய்க்குருபாதந் தனைவணங்கி-நினைவாகப்பெரியோர்கள் பதமும்போற்றி, மோதியேசித்தர்முத்தர் முனிகறுப்பு-முதலானராட்சதையு மேவல்வைப்பும், நிதானசத்துருக்கள் மிருகசாதி-நிபகொடுவிஷமுதலா யெதிர்நில்லாது, மீதுநீநினைத்தபடி யெல்லாஞ்சித்தி-விதமானவாளுஞ்செக் குலக்கைநாடடே. (௱௫௪)

நாடடியேயுலக்கைமுன்பு தேங்காயொன்று - நலமானதேங்காய்முன்குறடாவொன்று, கூடடியேயதின்பின்புபாதரட்சை-குறியாகவதின்முன்பு தேய்ந்தமாறும், தேடடியேயதின்முன்புவாழைநாடடித் - தெளிவானபந்தலிற்பூ மாலைகட்டி, ஆடடியேமாவிலைத்தோரணமுங்கட்டி-யப்பனேபூசைபலிபலக்கச்செய்யே. (௱௫௫)

பெலக்கவேயெடடிமுளை சருவர்பூசிப்-பேதமில்லையஷ்டதிக்கி லடித்துப்போடு, அலக்கவேகோடடைமுகேறிப்போடு-அப்பனேவாளியுடை இயானமோது, சிலக்கவேயெதிரியைநீ யெடுக்கச்சொல்லு-செயலாகவவன்வந்து சார்வானாகில், கலக்கவேகக்குகக்கு காளிதுர்க்கி-கருத்தாகஅரீஅம்அம் ஓமென்றோதே. (௱௫௬)

ஓதியேகண்கட்டு மையைவாங்கி - யுத்தமனேகையதனிற் றடவிக்கொண்டு, வாதியேவேப்பிலையை யுருவிப்போடு-வளமானதேள்கொட்டி மயங்குவான்பார், ஆதியேரங்ரங்கு குலியென்று - அப்பனேயுருந்தோதி யெறியவீழ்வான், சோதியேவறிவறிமறி சண்டாளி-சுகமானமாகாளி அம்அம்ரண்ணே. (௱௫௭)

எண்ணியேவிபூதியைத்தான் தியானமோதி-யெதிர்போடவ வன்விழுவான்கண்டுபாரு, நண்ணவேஓம்படுசுவாகாவென்று-நலமான விபூதியள்ளியோதிப்போடு, கண்ணவேயவன்விழுவான்கோபிப்பான்பார்-கனிவாக அம் மம் றீம் ஓமென்றேதான், உண்ணவேவேப்பிலைமண் ணுஞ்துடனேயரிசி - யுத்தமனேவிபூதிமுத லோதிப்போடே. (௩௯௮)

போடவுடனவன்விழுவானுதைத்துக்கொள்வான்- பொங்கமுடன்வன்வாயி லுதிரங்கக்கும், ஆடவுடன் மாறுகழல்குறடாவப்பா-அடைவானதேங்காயுமுலக்கைதானும், கூட்டமாயிதுகளெலாமெழுந்தடிக்கும்-கொற்றவனேவாளெழும்பிவெட்டும்பாரு, நாட்டமுடன் காளியைத்தான் தியானஞ்செய்தால் - நாயகனேயிவையெல்லாமடிக்குந்தானே. (௩௯௯)

தானடாஓம்சிங்வங்யநமவென்று-தயவாக அம்உம்அம்மம்மென்றேது,வானடாநங்மங்சிங்வங்யங்கென்று, வளமான அங்ஷீ அங்ஷீசுவாகாவென்று, கோனடாலட்சமுருஜெபித்துப்போடு-கொற்றவனேநினைத்தவெலாந்தம்பமாகும்-நானடாபோகருடகடாட்சத்தாலேநலமானபுலிப்பாணிபாடினேனே. (௪௦௦)

சோறுவேகாதிருக்க.

பாடவேயின்னமொருவித்தைசேளு - பண்பாகவெண்சாந்திவேளாவாங்கி, நாடவேசஞ்சாவித்தைங்கோலஞ்சேர்த்துநாயகனேயுலையரிசிதன்னிற்போட்டால் - கூடவேசோறதுவும்வேகாதப்பா, கொற்றவனேமாற்றுமிதுக்கில்லைபாரு, ஆடியேபோகருடகடாட்சத்தாலே-அப்பனேபுலிப்பாணிபாடினேனே. (௪௦௧)

பேயாட்ட.

பாடியேயங்சிங்வயநமவென்று- பண்பாகச்செபித்தவுடன்பசாசுபூதம், கூடியேயோடுமடாகண்டுபாரு - குணமாகவங்மங்சிங்சிவயநமவென்று, நாடியேஜெபித்தவுடனமுகும்பாருநாயகனேசிவயநமசிவென்று,கூடியேபசாசுமுதற்பூதமெல்லாஞ் சுறுக்காகவோடுமடாகண்டுபாரே. (௪௦௨)

உடுக்குகட்ட.

பாரடாசிவனுனேசித்துடுக்கடைச்சான்-பண்பாகச்சிவனம்மைபகவதியாணே, கூரடாஐயுங்கிலியும்சவ்வும்கட்டு - குறிப்பாகமாதவராணைகட்டு, சேரடாவராகிஐயுங்கிலியும்சுவாகா-சிறப்பாகஆதியந்தங்கட்டுகட்டு,வீரடாசெபித்தவுடனுடுக்குகட்டும் - விதமானபோகருடகடாட்சந்தானே. (௪௦௩)

வியாதிபோக்க.

தானப்பாஓம்தூளியந்ததூளி - தயவாகமுன்திருக் கண்ணிற்பின்தூளி, பானப்பாசாச்சல்தலை வலியும்பாரிற் - பறந்தோடச்

சுவாமிகுருவாணைபோவென்,'ஞானப்பாவிபூதியைநீதியானமோதி-
யளித்தவுடன்பலபிணியு மகன்றுபோகும், வானப்பாபோசருடக
டாட்சத்தாலே-வளமானபுலிப்பாணிபாடினேனே. (௱௯௪)

நீலகண்டமந்திரம்.

பாடினேனீலகண்டஞ்சொல்லக்கேளு - பண்பானஓம் நீலக
ண்டருத்ரா,ஆடியேமங்சிங்சர்வமாரணேத்தண்ட - அடைவாகஉ
ம்படுசுவாகாவென்று,கூடியேலட்சமுருஜெபித்துத்திரு-குற்றமறத்
தற்பணமாயிரந்தான்பத்து,நாடியேயோகமாயிரந்தானப்பா - நல
மான அன்னமிடு நூறுபேர்க்கே. (௱௯௫)

பேரானபிராமணர்க்கன்னம்போடு - பேதமில்லைபூசையதுப
த்தேயாகும்,நேரானபூசையதுவஸ்த்துசுத்தி- நிறைத்துவிடுநீலகண்
டஞ்சித்தியாச்சு,சீரானதமபனம்நீசெய்யவேண்டில்செயலாகசுவா
மியைப்பொன்னிறமதாக,வீரான நீலகண்டத்தியானமப்பா-விதமா
னமுகத்தில்நெஞ்சிலெண்கோணமோட்டே. (௱௯௬)

ஓட்டியேவம்புரோமென்றுநாட்டி - ஒளிவானவுருவப்பா மு
ப்பத்தாறு, திட்டியேசெபித்தவுடன்தம்பமாகும்-திரமாகச்சகலமு
ந்தம்பிக்கும்பார்,காட்டியேசுவாமிதனைவெள்ளையாகக் - கருத்தில்
வைத்துவிபூதியிலேவட்டங்கீறி,ஆட்டியேயம்மாரோமாயிரத்தெட்
டோதி-யன்பாகக்கொடுத்தவுடனழைக்கும்பாரே. (௱௯௭)

பாரடாசுவாமியைச்செந்நிறமதாகப் - பண்காமத்தியானத்து
முக்கோணங்கீறிச், சேரடாகிலியும்ரோமென்றுசொல்லிச்-செயலா
கவாயிரத்தெட்டுருஜெபித்து, வீரடாவிபூதிதனையணிந்துக்கொண்
டு-விதமாகச்சகலமும்வசியமாகும், தீரடாபின்னொருவர் தனக்கே
யீந்தால்-திறமாகவசியமாய்வணங்குவாரே. (௱௯௮)

வணங்கியேசுவாமியைப்பளிங்குநிறமாக- வளமாகத்தியானித்
துப்பிறைபோற்கீறி, அணங்கியேயம்மாரோமெனச்செபித்து - அ
டைவாகவாயிரத்தெட்டுருத்தானோதி,நண்ங்கியேவிபூதியைப்பூசிக்
கொண்டால்-நாயகனேசகலமு மோகமோகம், இணங்கியேசுவாமி
யை மேகநிறமாக-இன்பமுறத்தியானித்து நாற்கோணங்கீறே. ()

கீறியேஓம்ராம்யம்ரோமென்று - கிருபையாய்தென்றேலை த
ன்னிலப்பா, சீறியேயிருவர்பேர்தன்னைச்சூட்டிச்- சிறப்பாகவாயி
ரத்தெட்டுருஜெபித்து, வீறியேயெதிரியில் முன்னிறப்பில்வைக்க-
விதமாகவிருவருமேபிரிந்துபோவார், தேறியேசுவாமியைப்புகை
வர்ணமாகத்-தெளிவாகத்தியானித்தைங்கோணங்கீறே. (௱௭௰)

கீறியேயம்ரோ மென்றுநாட்டிக் - கிருபையுடனாயிரத்தெட்டு
ருஜெபித்து, மாறியேவிபூதியை நீபோட்டபோது- வரிசையுடன்ச
கலமு மோடிப்போகும், தேறியேசுவாமியேப் பிரளயகாலருத்ர

ஞய்த் தியானித்துமுக்கோணந் திரமாய்கீறி, ஏறியேரம்ரோமென்றுநாட்டி-எளிதிலேசத்துருவின் செத்தெழுத்தைநாட்டே. (௱௭௧)

நாட்டியேயாயிரத்தெட்டுருத்தானேதிநாயகனேயழல்காட்ட தீறிப்போகும், வாட்டியேசகலமுமாரணமாய்ப்போகும்-வளமான சுவாமியைக் கறுப்பதாகக்.கூட்டியேதியானித்துமுக்கோணங்கீறி-குணமாகபடம்மென்று அதிலேநாட்டி, குட்டியேயாயிரத்தெட்டுருத்தானேதிச்-சுறுக்கப்பாதீறிடவே பேதந்தானே. (௱௭௨)

சிவகிரிமகிமை.

தானானசிவகிரியில் தண்டாயுதபாணி - தாதாவைப்பூசித்தோன்பிரமனிந்திரன், தேனானபோகருடனிவர்கள்மூவர்-தெளிவாகமுன்யுகத்தில் மூவரப்பா, கோனானகலியுகமிருநூற்றைந்தில் - கொற்றவனேபுலிப்பாணிபூசித்தேன்பார், மானான அஷ்டசத்திகோடாசத்தி-மைந்தனேசித்தருடனடனந்தானே. (௱௭௩)

தானானராஜரொடு குருக்கள்பெண்கள்- தயவானவேதியர்கள் சிறுவரேழை, வானானவிவர்களுக் கிடுக்கமான- வஞ்சகத்தொழில் முறைகள்செய்தால்தோஷம், கோனுகச்செய்தவர்கணரகில்வீழ்வார்-குற்றம்வருநற்பதவிகிட்டாதப்பா, தேனானபோகருடகடாட்சத்தாலே தெளிவாகப்புலிப்பாணிபாடினேனே. (௱௭௪)

பாடியேசாத்திரத்தைப்பழித்தபேர்கள்-பண்பிலாக்கூன்குருடு ஊமையாகி, வாடியேசப்பாணி நொண்டியாகி- வளமிலாச்செவிடாகி ரூபங்கெட்டுச், சாடியேயவர்களெலாம் நாசமாகிச்-சாவார்கள்பெண்டுபிள்ளை யெல்லாஞ்சேர்ந்து, கூடியேவியாதியிலே யழுந்திமாய்ந்து-கொடிதானநரகத்தி லழுந்துவாரே. (௱௭௫)

வாரான ஐயும்நமோ பகவதேஓம்- மகாரூபமகாமாயி மகத்வசத்தி, தேராகச்சர்வகாரணிசுவாகாவென்று- தெளிவாகலட்சமுருஜெபித்துத்திரு, சாரடாதர்ப்பணத்தோடோமமன்னம்-தயவானபூசையது திறமாய்ச்செய்நீ, கூறடாமகாமாயைசித்தியாச்சு- குணமாகவதின்பெருமை கூறக்கேளே. (௱௭௬)

கேளடாசத்தியைத்தான் பூசைசெய்யக் - கேலிசெய்துசோதனைகள்பார்க்கவந்தால், நாளடாமந்திரத்தைத்தியானஞ்செய்து-நலமானவஸ்துசுத்தி பால்பூவென்று, வாளடாதியானித்துநினைத்தபோது-வளமானபால்பூவாயிருக்கும்பாரு, ஆளடாபோகிருடகடாட்சத்தாலே-யப்பனேபுலிப்பாணியருளினேனே. (௱௭௭)

கார்த்திகை வீரியார்ச்சுன மந்திரம்.

அருளாலே ஓம் ஆம் ஸ்ரீயும் கிலீயும்- அரியகார்த்திகைவீரியார்ச்சுனசுவாகாவென்று, பொருளாகலட்சமுருஜெபித்துதிரு - பொங்கமாய்தர்ப்பணமுமோமமன்னம், வரமாகப்பூசையது பத்துஞ்

செய்நீ - மைந்தனே சித்திச்சுக்கிரிகையாகும், சுருளாகநினைத்தபடி யெல்லாஞ்செய்யும்-சுகமானபோகருடகடாட்சம்பாரோ. (எளஅ)

நரசிங்கமந்திரம்.

பாரடாநரசிங்கஞ்சொல்லக்கேளு - பாங்காகஓம்சிங்கமுகவா ஓம்ஓம், கூரடாபிடித்துகடித்தொடித்துசிந்திச்- குணமாகக்கண்டுபி டித்தருளாளைப்போல், தீரடாபசாசுபேய்பொடிபட்டோடத்- திற மாகநரசிங்காராஜாவரணை, சீரடாஸ்ரீம்கிலீம்சுவாகாவென்று-சிறப்பா கலட்சமுருஜெபித்துத்திரோ. (ாளகூ)

தீரப்பாதர்ப்பணமுமோமமன்னம் - திறமாகப்பூசையதுதெ ளிவாகத்தான், கூரப்பாயானைமுதல்மிருகஜாதி - கொற்றவனேகாடு செந்நெலெழுகிக்கட்டு, பாரப்பாமிருகத்தார்கொடுமையில்லை-பல ன்கிட்டுநினைத்தபடியெல்லாஞ்செய்யும், நேரப்பாபோகருடகடா ட்சத்தாலே-நிச்சயமாம்புலிப்பாணிசொன்னேன்காணே. (ாஅய)

காணவேஓம்சர்வசத்துருநாசா- கனிவாகஓம்படுசுவாகாவென் று, மாணவேலட்சமுருஜெபித்துத்திரு-வளமானதர்ப்பணமுமோ மமன்னம், கோணுமற்பூசையதுபலத்துச்செய்நீ-குணமாகச்சாம மதுசித்தியாகும், நாணுதுநினைத்தபடியெல்லாஞ்செய்யும் - நாயக னேபசாசுமுதற்பூதம்போமே. (ாஅக)

செண்டபோண்டமந்திரம்.

போமப்பாஇச்னமொன்றுசொல்லக்கேளு- பொலிவானகெ ண்டபோண்டர்தன்னைத், தாமப்பாஆம்ஓம்அகோரப்பிரபல-தயவா னகண்டபேரண்டசிங்கா, வாமப்பாவியாக்கிரசுவாகாசாகாமிருகா- வளமாக்காற்றுடுபல்லா அஷ்டவச்ரா, ஆமப்பாசூலமுதலாகவேதா ன்-அடைவாகச்சங்குசக்ராதியெண்ணே. (ாஅஉ)

எண்ணவேதாதுப்பிராணுமாவிதாத்மா- இதமானசெஜபட்சே வெந்தனரசிம்மா, அண்ணவேகற்பாந்த அக்னிலீலா - அடைவான ஊட்தாப்புயந்திரத்தில், பண்ணவேஇலவச்ரசமானதுண்டா-பண்பா னதாஷ்டிரசவுக்ரமூர்த்தி, உண்ணவேபட்சமாருதமச்சாந்த - உத்தம னேதாரணியில்நம்பியென்னே. (ாஅரு)

என்னவேயுத்தண்டவஸ்திரசர்ப்பா- என்னப்பாகெண்டபேர ண்டஞ்சித்தி, மன்னவனேமூலப்பாசொல்லக்கேளு -வளமானஓம் இரீம்ஸ்ரீயுமென்று, உன்னவேகிலீம்ஐயும்படுசுவாகா-உத்தமனே

கெண்டபேரண்டநரசிங்கா,பன்னவேமகாசர்வரனந்தசாயா - பதி
வானசர்வசத்ருநாசமாமே. (௱௮௪)

ஆமப்பாசிந்திசிந்தியந்தியந்தி- அடைவாகலட்சமுருத்தானே
யோது, தாமப்பாதர்ப்பணமாயிரந்தான்பத்து-தயவானஓமமப்பா
ஆயிரந்தான்,வாமப்பாபிராமணபோசனந்தானூறு-வளமானபூசை
யதுநாள்பத்தப்பா, நாமப்பாகெண்டபேரண்டஞ்சித்தி-நாயகனே
சகலசித்துமாமப்பாரோ. (௱௮௫)

பாரடாபிரமனொடு விஷ்ணுருத்ரன் - பண்பானகுலிசனொடு
தேவர்யாரும்,சீரடாசித்தர்முத்தர்முனிகள்பூதம் - சிறப்பில்லாராட்
சஸதயுமேவல்வைப்பும்,தீரடாசத்துருக்கள்மிருகஜாதி-தீதானவிஷ
முதலாயெதிர்தில்லாது,வீரடாநினைத்தபடியெல்லாஞ்சித்தி-விதமா
ணபோகருடகடாட்சர்தானே. (௱௮௬)

பிரத்தியங்கிராதேவிமந்திரம்.

தானேதானின்னமொன்றுசொல்லக்கேளு - தயவாகப்பிரத்
தியங்கிராதேவிமந்திரம்,வானேதான்சகலசத்துசம்மாரி-வளமானசு
கலசம்பத்துமீவாள்,தேனேதான்கிருபைவாரிதியதானுள்-தெளிவா
ணகார்மேக வடிவமுள்ளாள், கோனேதான்சிங்கமுகஞ்சிங்கப்பல்
லு-கொடியமுக்கணுமக்கினிச்சுவாலையெண்ணே. (௱௮௭)

எண்ணவேயஷ்டதிக்குநிறைந்ததேகி- இலகுமாயுதத்தோடா
பிரங்கையுள்ளாள்,பண்ணவேகிண்கிணிமாலைகொண்டாள்-பத்தர்க
ள்தன்சத்துருவைநாசஞ்செய்வாள், அண்ணவேயுதிரமதுபானஞ்
செய்வாள்-அடைவானசகலசாஸ்திரமும்வல்லாள், நண்ணவேதியா
னித்துச்சரணம்பண்ணு-நாயகனேமூலமினிசொல்லக்கேளே. ()

கேளப்பாசுவாலாஜிம்மேபிரத்தியங்கிரே-செணிதமுடனுஉம்
படுஓம்ஆமென்று, நாளப்பாஇறீம்ஸ்ரீயும்கிலீயுமென்று-நலமானசி
ம்ம முகியுக்கிரகாளி,சூளப்பாவட்டமுக்கோணமிட்டுச்-சுகமாகவதி
ன்மேலேயெண்கோணஞ்சதுரம்,ஆளப்பாவட்டமதிலிச்சமென்றி
ட்டு-அரியமுக்கோணமேல்முனையிற்கேளே. (௱௮௯)

கேளடாறீங்காரமதிலேயிட்டுக் - கெணிதமாயிடக்கோணம்உ
ம்மைநாட்டி.ஆளடாவலக்கோணம்படுவேயென்று- அடைவாகஎண்
கோணம்நீயைக்கேளு-நாளடாநாற்கோணம்வலமேல்மூலை, நலமா
கஆமென்றுபதித்துப்போடு, சூளடாஇடக்கோணமேலேயப்பா-சு
கமாகக்கிரோமென்றுகுட்டிப்போடே. (௱௯௰)

போடேநீயிடக்கோணங்கீழேயப்பா - பொங்கமுடன்புரோ மென்றுபதித்துவைப்பாய்,ஆடேநீவலக்கோணங்கீழேதானும் - அப்பனேஸ்ரீமென்று அடைவாய்ப்போடு, சூடேநீயட்சரங்கள்நிரந்தந்தன்னில்-சூட்டினால்வலிமையடாதகமோதங்கப்,நாடேநீலட்சமுருஜெபித்துத்திரு-நாயகனேதர்ப்பணமுமோமஞ்செய்யே. (௱௯௧)

செய்யப்பாபிராமணருக்கன்னம்போடு - செயலாகநினைத்தபடியெல்லாஞ்செய்யும், சையப்பாபூசையது சத்திபூசை-கனிவாகச்செய்திடுவாய்வெள்ளிதோறும் - ஐயப்பாவிதத்தெந்திரி ஜெகத்திலில்லை, யப்பனேவானுலகத்தன்னிலில்லை, உய்யப்பாபோகருட கடாட்சத்தாலே-யுத்தமனேபுலிப்பாணிபாடினேனே. (௱௯௨)

பாடினேன்பூச்சக்ரவாளத்துள்ளே - பண்பானமகமேருபர்வதங்களெட்டும், நாடினேனவகண்டஞ்சத்ததீவு-நலமானசத்தசாகரங்களேழும் - கூடியேயஷ்டதிக்குமைம்பத்தாறு, குணமானதேகமெங்குஞ்சென்றாலுந்தான்- ஆடியேபிரத்தியங்கிராகிருபையாலே அப்பனேஜெயங்கொண்டுமீளலாமே. (௱௯௩)

ஆமப்பாவிஷ்ணுநரசிங்கமாகி- அடைவாகவிரணியனைக்கொன்றதோஷம், வாமப்பாபிரமைகொண்டமயக்கந்திர-வளமானஈஸ்வரனுஞ்சாபரூபம்,தாமப்பாவடிவுகொண்டுநரசிங்கத்தைத்-தானழித்தேயுதிரமதைக்கொண்டதாலே,போமப்பாமருள்கொண்டுமயக்கமிஞ்சிப் பொலிவானஈஸ்வரனுமிருந்தார்பாரோ. (௱௯௪)

பாரப்பாஈஸ்வரனார்மயக்கநீங்கப் -பரிவானவிஷ்ணுசெண்டபேரண்டமாகிச்,சேரப்பாசரபத்தைப்பிளந்துபானஞ் - செய்ததாலீஸ்வரற்குப்பிரமைபோச்சு, தீரப்பாகெண்டபேரண்டமப்பா திறமழித்துமருள்கொண்டு மயக்கமாகிக்,கூரப்பாதேவர்களையடித்ததாலே-குணமானஈஸ்வரனுமோடலாச்சே. (௱௯௫)

ஆச்சடாஇதனைப்பார்வதியாய்ப்பார்த்து - அடைவானபிரத்தியங்கிராரூபமாகி,வாச்சடாகெண்டபேரண்டபட்சி-மதநீங்கத்தான்பிடித்துச் சிரசைக்கொய்யப், போச்சப்பாபிரமையதுதீர்ந்துபோச்சு,பொலிவானவிஷ்ணுவுந்தன்னுருவமானார், வீச்சப்பாபோகருடகடாட்சத்தாலே,விதமானபுலிப்பாணிபாடினேனே. (௱௯௬)

அயச்செப்பு.

பாடியேயயச்செம்புசொல்லக்கேளு- பண்பாங்கற்றுமனாயின்கிழங்கைபாட்டிக்,கூடியேயிரும்புகளின்மேலேபூசிக் - கூசாமற்புடம்போடச்செம்பதாகும் - ஆடியேயயச்செம்புவழதாகும், அ

ப்பனேவெள்ளியிடையொன்றுகூட்டி, நாடியேயுருக்கிடவேயேழு
மாற்று, நாயகனே தப்பாதுசெய்துகேளே. (௱௯௭)

கேளயச்செம்பொன்று தங்கமொன்று-கெணிதமுடன்தானு
ருக்கித்தகடாய்த்தட்டிச், சூளாகப்பொடியாக்கநறுக்கியப்பா - சுத்தி
செய்தரசமிரண்டு கூடவிட்டு-நாளானகெந்தியிடை நாலுங்கூட்டி-
நாயகனேதாரமிடையனாயுஞ்சேர்த்து, வாளானபொற்றலையின்சா
ற்றாலாட்டி-வளமாகவுலரவிட்டுக்குப்பிக்கேற்றே. (௱௯௮)

ஏற்றப்பாசட்டிக்குள்மணல்விரல்தானு-இதமாகநீகொட்டி
க்குப்பிக்கேதான், மாற்றமாமண்சீலையேழுசெய்து - வாய்மூடமா
க்கல்லையுமைத்துமூடி, சாத்தமேகுப்பிவைத்து மணலைக்கொட்டிச்-
சார்வாகக்குப்பிவாய்க்கழுத்துமட்டும், ஊற்றமாய்நாற்சாமமெரித்
தேயாற்றி-யுத்தமனேயெடுக்கச்செந்தூரமாமே. (௱௯௯)

ஆமப்பாநவலோகப்பத்துக்கொன்று-அப்பனேதான்கொடுக்க
மாற்றேறபத்து, தாமப்பாதேவிக்குதிருவாணிக்கும் - தயவாகப்பூ
சைசெய்து நிலையில்நின்று, வாமப்பாபெரியோரைவணங்கிவாழ்த்
தி-வாழ்குவாயுலகமதிற்சீமானுக, நாமப்பாபோகருடகடாட்சத்தா
லே-நலமானபுலிப்பாணிபாடினேனே. (௨௱)

ரசமணி.

பாடியேரசம்பத்துசுத்திசெய்து- பண்பானநாகத்தின்வாயில்
வார்த்து, ஆடியேமுப்பூவுங்கழஞ்சிபோட்டு - அடைவாகக்கட்டிநீ
மேலேதூக்கு-கூடியேயதின்கீழேபானைவைநீ, கொற்றவனேபாம்
பழுகிவீழும்பாரு-நாடியேரசங்கட்டிமணியாய்ப்போகும் - நாயக
னேவேதைமுதல்வசியமாமே. (௨௱௧)

ஆமேநீகெந்தியிட்டுச்செந்திரித்தால்- அப்பனேநவலோகந்த
ன்னில்வேதை, வாமேநீஇருநூறுமிந்திரஜாலம்-வளமானகண்ணாடி
போலேநேர்ற்றும், தாமேநீநவரத்நங்கோர்த்தாற்போல-தாரணிதனி
ல்தான்விளங்கும்புலிப்பாணிதானும், நாமேநீபோகருடகடாட்சம்
பெற்றேன்-நலமானஜாலமிருநூறுமுற்றே. (௨௱௨)

புலிப்பாணிஜாலத்திரட்டுமுற்றிற்று.

ஸ்ரீபரதேவதார்ப்பணமஸ்து.

சிவமயம்.

ஸ்ரீபரதேவதார்ப்பணமஸ்து.

புலிப்பாணிமஹாமுனிவர்

அருளிச்செய்த

சிதம்பரம்-௨௰.

அத்திமுகன்றனையளித்தவரனேகாப்பு - அகிலமெங்குநிறைந்துநின்றவருளேகாப்பு, முத்திதருவேதாந்தமுதலேகாப்பு-முப்புரத்தைத்தகித்தெரித்தபரனேகாப்பு, சத்தியொருபாகம்வைத்தவரசேகாப்பு-சங்கரனேயம்பரனேஞானமூர்த்தி, வெற்றியாஞ்சிதம்பரத்ன்பூசைமார்க்கம்-விளம்புகிறேன்கணேசனுடபாதங்காப்பே.

காப்பானஆறுவளைகுறுக்கேகீறிக் - களங்கமிலாஆறுவளைநேரேகீறி, ஆப்பானஇருபத்தஞ்சறையுமாச்சு- அடைவானமுன்னேதோறுஞ்சூலம்போடு, தாப்பானமுதலறையிலறுகோணந்- தயவானநகாரமொடு அகாரங்கூட, வாப்பானஐயோடுவகாரந்தானும்- வளமானலக்கமதுபத்துமாமே. (௧)

ஆமப்பா அடுத்தறையிற் பிறைதான்கோணம் - அடைவானமகாரமொடுஇகாரங்கூடத், தாமப்பாகிலியோடுவகாரந்தானும்-தயவானலக்கமது பதினெட்டாகும், வாமப்யா அடுத்தறையில்முக்கோணந்தான்-வளமானசிகாரமொடு உகாரந்தானும், நாமப்பாசவ்வுடனே நகாரந்தொட்டு-நலமானலக்கமதுபதினாலாமே. (௨)

ஆமடாஇதினருகேயறுகோணந்தான்- அடைவானவகாரமொடுஏகாரந்தானும், தாமடாஸ்ரீமுடனேயகாரங்கூடத்-தயவாகலக்கமதுஆறும்பாரு, வாமடாஇதனருகேவட்டம்போடு- வளமானயகாரமொடுஓங்காரந்தான், நாமடாஹரிஓமென்றுநாட்டி- நலமானஅகாரமொடுலக்கமூன்றே. (௩)

மூன்றானநடுவணையையெடுத்துமாறி - முன்னுமாய்ச்சக்கரமோரிருபத்தஞ்சில், நான்றானசூலத்தினிடைகள்தோறும் - நாயகனேநீயும்ஸ்ரீமென்றுமாட்டிப், பான்றானசூலமுன்னேஸ்ரீமைப்போடு- பண்பானதிரிவட்டம்பாங்காய்க்கூட்டு, ஊன்றானஉள்வட்டமிதழ்தான்மூன்று-உத்தமனேயிருவட்டமிதழீரெட்டே. (௪)

எட்டானதிரிவட்டமெண்ணுன்கப்பா - இதமாகநடுவட்டமுதலாமாதி, கட்டானஅகாரமுதல்சகாரமட்டும்- கனிவாகஐம்பத்தொன்

றுமாச்சு, இட்டானஉபரோகைவாசல்நாலு-கீழ்வாசல்கணபதிக்குக்க
க்குநாட்டு, நாட்டானமேல்வாசல்வடுகன்பீஜம்- நாயகனேவங்கெ
ன்றுநாட்டிடாயே. (ரு)

நாட்டியேதென்வாசல்பிரிதிபீஜம்- நலமாகஅம்மென்றுநாட்
டுநாட்டு, கூட்டியேவடவாசல்மதியின்பீஜம்- குணமாகசசம்மென்
றுகுறித்துப்போடு, ஆட்டியேயுபரோகலைவீதிக்குள்ளே - அடைவா
கஇந்திரானிலமாம்பாரு, வாட்டியேயக்கினியில்ரம்மென்றப்பா-வள
மாகமென்றனிற்சம்மென்றுபோடே. (சு)

போடவேநிருதியிலே அம்மேயாகும்- பொலிவானவருணனி
லேவம்மேபாரு, சாடவேவாய்வுதனில்யம்மேபோடு - சார்வானகு
பேரனிலேளம்மேநாட்டு, வீடவேஈசானஞ்சம்மேசேரு - விதமா
ன அஷ்டதிக்குப்பாலராச்சு, ஆடவேபோசருடகடாட்சத்தாலே- அ
ப்பனேபுலிப்பாணிபாடினேனே. (எ)

பாடினேன்தமிழெழுத்தில் அகாரந்தொட்டுப்- பண்பானபிர
ணவத்தின் வரைக்கும்போடு, ஆடியேதசாங்கமென்ற எழுத்தோப
த்து- அப்னேசக்கரத்திற் சுற்றிப்போடு, கூடியேதமிழெழுத்தில் அ
காரந்தொட்டுக்-கொற்றவனேஒவ்வொன்றிலுயிராய்ப்பாரு, நாடியேச
க்கரத்திற்சுற்றிப்போட-நலமாகஈராறுஎழுத்துமாச்சே. (அ)

ஆச்சப்பா அசபையுடனெழுத்துக்சர்ணம்- அடைவாகமேல்வா
சற் கீழேபோடு, பாச்சப்பாவலமங்கிசத்திபீஜம்- பண்பாகஅம்மெ
ன்று பதித்துப்போடு, வாச்சப்பாஇடம்பரா சத்திபீஜம்-வளமாகக்
கிரோமமென்று குறித்துப்போடு, வீச்சப்பாவலப்பாக மிடப்பா
கந்தான்-விதமானஐயுங்கிலியும்சவ்வுமாமே. (கூ)

ஆமடா அம் இம் உம் எம் ஓம்மென்றே - யப்பனேபஞ்சப
ட்சி இருபுறமும்போடு, வாமடா அம் சம் ஸ்ரீயுமென்று-வளமான
மங்குடனேநசியென்றேது, தாமடாகிரீமுடனேறம்முங்கூட்டி
த்-தயவானவிம்முடனே யங்கியென்று, நாமடாநவக்கிரக பீஜமா
ச்சு-நலமானசக்கரத்திற் சுற்றிப்போடே. (ய)

போடப்பாசுருபியென்ற வெழுத்துமப்பா-புகழ்தருவக்கிலி
யல்லோ மதனபீஜம், நாடப்பாகீழ்வாசல் மேலேயப்பா- நலமான
ஈதிரண்டும் பதித்துப்போடு, கூடப்பாசிதம்பரத்தின் பூசைசெய்ய
க் - கூத்தாடுங்கணங்கள்முத லெல்லாமாடும், ஆடப்பாபோகருடக
டாட்சத்தாலே-அடைவாகப்புலிப்பாணிபாடினேனே. (யக)

பாடியேஅகாரத்திலுகாரமிட்டுப் - பண்பானஓங்காரங் கொ
ண்டுநீட்டி, நாடியேயதின்கீழே மகாரமிட்டு-நலமாக அதின்மேலே
றீங்காரந்தான், கூடியே அரியெழுத்து மேலேவாங்கிக் - குணமாக

ச்சூலமிட்டு ஸ்ரீயை நாட்டு, ஆடியேசிங்குவங்கென்றுநாட்டு-அடைவாயேகாட்சரத்தைப் பதித்துப்போடே. (௰௨)

போடுசிந்தாமணிக்குச் சிகாரமிட்டுப் - பொங்கமுடன்மகாரமொடுயகாரம்போட்டு, ஆடவே அகாரமுடன் விந்தைப்போட்டு-அடைவாஞ்சக்கரத்தில் திரிவாசிருட்டக், கூடச்சிந்தாமணிக்கு பீஜமாச்சு-குணமானசக்கிரத்திற் பதித்துப்போடு, நாடியேபோகருடகடாட்சத்தாலே-நலமானபுலிப்பாணி பாடினேனே (௰௩)

பாடியேவலப்புருவம் அகாரம்போடு- பண்பானஇடப்புருவம் ஆகாரமாகும், நாடியேவலக்கண்ணும் இகாரம்போடு- நலமானஇடக்கண்ணும் ஈகாரந்தான், சாடியேவலக்காது உகாரம்போடு-சமர்த்தானஇடக்காது ஊகாரந்தான், வாடியேவலதுகன்னம் இரேம்நீபோடு-வடிவானஇடக்கன்னம் ஈரேம்நாட்டே, (௰௪)

நாட்டடாவலமூக்கு இல்லாவென்று - நாயகனேஇடமூக்கு ஈலாவாகும், ஆட்டடாமேலுதடு ஏயைப்போடு - அடைவானகீழுதடு ஐயைப்போடு, கூட்டாமேற்றந்தம் ஒவ்வைப்போடு - குணமானகீழ்ச்தந்தம் ஔவைநாட்டு, மாட்டடாநாவதிலே அம்மென்றப்பா-மணியானகண்டத்தில் ஆகாரமெண்ணே. (௰௫)

எண்ணவேசக்கரத்திற்பதித்தபின்பு-இதமாகச்சாபங்கணி விர்த்திசெய்து, நண்ணவேபிராணப்பிர திஷ்டைசெய்து-நல்லோமம்பூசைசோடசமுஞ்செய்து, அண்ணவேசுகந்தபரிமளங்கள்புஷ்பம்-அடைவாகவர்ச்சித்துக் கனிகளோடு, தண்ணவேபலகாரம் பரமான்னந்தான்-தாம்பூலமிளநீரும் பாலுந்தேனே. (௰௬)

தேனானபாணக்க மன்னத்தோடு-தெளவானவறுசுவையு மதுவுஞ்சுத்தி, தானானசர்வமுஞ் சுத்திவைத்து - தயவாகப்பூசித்துத் தியானமோது, வானானகர்ப்பூர தீபமேற்று - வணங்கவே அஷ்டசித்துஞ்சித்தியாகும், மானான அஷ்டசித்தி தீர்த்தஞ்செய்வாள்-வானவரும்லோகமெலாம் வசியமாமே. (௰௭)

ஆமடாசிவகிரியில் தண்டாயுதபாணி-ஐயனைத்தான்பூசித்தோர்சொல்லக்கேளு, தாமடாகிரேதா யுகத்திலப்பா- தயவானபிரமாவும்பூசைசெய்தார், வாமடாதிரேதா யுகத்திலப்பா -வண்மையாய்க்கவுசிகர்தா மகிழ்ந்துசெய்தார், காமடாதுவாபரத்திற்போகநாதர்- கலியுகத்திற்புலிப்பாணிபூசித்தேனே. (௰௮)

பூசித்தஞானமது தொண்ணூற்றாறு-பொங்கமுடன்பலதிரட்டுநூறுமாகும், ஆசித்தேன்சொக்கோகம்நூறுபாதி-அப்பனேஜாலந்துரொண்டுநூறு, வாசித்தேன்சோதிடந்தான்முந்நூறாகும் - வளமானவயித்தியமோஐந்நூறாகும், வீசித்தேன்சண்முகத்தின்பூசை மார்க்கம்-விதமாகமுப்பதிலேவிளம்பினேனே. (௰௯)

விளம்பவேசிமிழ்வித்தை யிருபத்தஞ்சு - விதமான தேவியு
டபூசைமார்க்கம், தளம்பவேயிருபதோடொன்றினுள்ளே - தயவா
கச்சொல்லிவைத்தேனன்றுய்ப்பாரு, இளம்பவேசிதம்பரந்தா னி
ருபத்தஞ்சு-கெட்டியாய்ப்பாடினேனுகந்துபாரு,வளம்பவேபோ
கருடகடாட்சத்தாலே-வளமானபுலிப்பாணிபாடினேனே. (௨௰)

பாடினேன்பநமசிவவசியமாகும் - பண்பானமசிவயநமோக
னமேசித்தி, ஆடிவேல்சிமநய அழைப்புமாகும்- அப்பனே நமசிவ
யதம்பனமேசெய்யும்-கூடியேவயநமசியுச்சாடனந்தான்- குணமா
னயவசிமநபேதனந்தான், தேடியேநயவசிமவித்துவேஷணம் - சி
வயநமமாரணமாய்ச்செப்பலாமே. (௨௧)

ஆமடாவசியமுடன்தம்பனம்பேதனம்- அடைவானநடுவணை
யைப்பிடித்துமாறி, தாமடாமோகனமுமழைப்புமப்பா - தயவாக
ஒண்டெழுத்தையெடுத்துமாறி, வாமடாநாலெழுத்தை மாறில்வித்
துவேஷணம்-மன்னுமுச்சாடனங்கால்தலையாப்போடு,தீமடாமார
ணங்கடையெழுத்தைமாறித்-தீர்ந்தசக்கரமெலாமாரணமாமே.(௨௨)

ஆமடாகாரீயம் வசியமாகும்-அப்பனேவங்கமோகனமேசித்தி,
தாமடாபொன்னதுவு மழைப்புமாகும்-தயவானசெம்பது தம்பன
மேசித்தி, வாமடாவெள்ளீய முச்சாடிக்கும் - வளமானகுருத்தோ
லைவித்துவேஷணம், யோமடாஇரும்புபே தனமேயாகும்- பொங்
கமுறுவெள்ளிமா ரணந்தானுமே. (௨௩)

தானென்றவசியமுடன் தம்பனமோகனம்- தயவான அழைப்
புமுத லிவைநாலுக்கும், கோனென்றஆள்காட்டி விரலேநீளம்-கு
ணமான அகலமப்பா பெருவிரல்நீளம், தேனென்றபேதனமாரண
மும்வித்துவேஷணம் - தெளிவானஉச்சாடன மிவைநாலுக்கும், பா
னென்றபவித்திரவிரல் நீளமப்பா - பகர்ந்தசிறுவிரலினிகள மகல
மாமே. (௨௪)

ஆமடாஇறைபாறுவீசமாகும்- அப்பனேயினிரண்டு அறைக்கா
லாகும், தாமடாமூவெட்டுக்காலேயாகும்-தயவாகஇதிலிரட்டியனா
யேயாகும், வாமடாஇதிலிரட்டிமுமுதென்பார்கள்- வளமானகணம
ப்பாநெற்கனந்தான், நாமடாவீசமதுஒருநெல்லாகும்-நலமானசித
ம்பரத்தின்பூசைமுற்றே. (௨௫)

புலிப்பாணிமுனிவரருளிச்செய்த

சிதம்பரம் - ௨௫ - முற்றிற்று.